தனிப்பிரதி விலை { உள் நாடு 1½ அணா
வெளிநாடு 1½ அணா

KUDI ARASU. Reg: No. M. 2041


# குடி அரசு


வருட சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா ,, ... ரூ 1-12
வெளிநாட்டிற்கு ,, ... ரூ 4—0

வாரப்பதிப்பு
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. ½
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்.

மாலை 5 | ஈரோடு சுக்கில ஞு வைகாசி மீ 20 உ. (2—6—29) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 5



## "பகுத்தறிவு."

கூடிய விரைவில் "குடி அரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப்போகும் மாதப் பத்திரிகை,

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளிவரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருட சந்தா அணா 0—8—0 எட்டே. வெளிநாடுகளுக்கு 0—12—0

விலாசம்:—

"பகுத்தறிவு" காரியாலயம், ஈரோடு.

(f)



## பொங்கலூர் பாடசாலை க்ஷேமநிதிச் சீட்டு.

பொங்கலூர் கம்மகுலப் பிரமுகர்களான திருவாளர்கள், பெரியமுத்து நாயுடு, நா, வெங்கடசாமி நாயுடு, ஆகிய இரு கனவான்களின் பெருமுயற்சியால் பொங்கலூரில் 10000 ரூபாச் செலவில் பாடசாலைக்கட்டிடமும் 5000 ரூபாச் செலவில் ஆசிரியர்கட்கு ஆறு விடுதிகளும் அயலூர் மாணவர்கட்கு ஹாஸ்டலும் கட்டப்பட்டு சுமார் 9-ஆண்டுகளாக ஒழுங்காக ஒரு கமிட்டியின்மூலம் நடைபெற்றுவரும் உயர்தர எலிமெண்டரி கிரேட் பாடசாலையின் விசேஷ அபிவிருத்திக்காக ஒரு க்ஷேமநிதிச்சீட்டு ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கிறது. கோவை ஜில்லாவில் பொறுப்புவாய்ந்த கனவான்கள் அடங்கிய ஒரு கமிட்டியின்மூலம் இந்தச்சீட்டு நடைபெறுகிறது. எல்லாரையும் ஆதரவளிக்குமாறு வேண்டுகிறோம்.

சீட்டின் விபரம்.

டிக்கட்டு ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் 22 டிக்கட்டுகள் அடங்கியது ஒரு புஸ்தகம். 4550 புஸ்தகங்கட்கு ரூ. 100100 வசூல் செய்யவேண்டும். இதில் செலவு ரூ. 14100 போக மீதி ரூ. 86000 ல் பாடசாலை நிதிக்கு ரூ. 43000 வைத்துக்கொண்டு பிரைஸ் 1-க்கு 6000 ரூபாய் முதல் 5 ரூபாய் வரையில் 4306 பிரைஸ்களுக்கு 43000 ரூபாய் கொடுக்கப்படும்:

ஒரு டிக்கட்டின் விலை ரூ. 1—0—0 22 டிக்கட்டுகளடங்கிய ஒரு புஸ்தகம் விற்றவர் ரூ. 20 சபைக்கு அனுப்பிவிட்டு 2 ரூ, கமிஷன் எடுத்துக்கொள்ளலாம் சீட்டு 1929-வரு ஆகஸ்டுமீ 11 உ. எடுக்கப்படும். மற்றவிபரங்கட்கு காரியதரிசிக்கு எழுதவும்.

காரியதரிசி

க்ஷேமநிதிச்சீட்டு ஆபீஸ்,
பொங்கலூர், (பல்லடம்வழி)
கோயமுத்தூர் ஜில்லா.


**சுய மரியாதை இழந்து மனிதன் என்று வாழாதே!**


## கைத்தொழில் முறைகள்.

1000 இரகசிய முறைகள் கொண்டது. சோப்புகள், மெழுகுவர்த்திகள், தீக்குச்சிகள், வார்னிஷ்கள், பிஸ்கத்துகள், பென்சில்கள், பலவித மருந்துகள் இன்னும் இதுபோன்ற 1000 எளிய முறைகள் கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இருக்கவேண்டும். 300 பக்கம் எறெப்னேன் டிரேட் மார்க் உள்ளது ரூ 1—8—0. உடனே எழுதுங்கள்.

வாஸன் புஸ்தகசாலை,
244, தங்கசாலை வீதி, மதராஸ்,

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.


## மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும்உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0,

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
(4-b) தபால் பெட்டி 119, மதராஸ்.

எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

## இனும்! இனும்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனும்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனுமாய் அனுப்பப்படும். கடிகாரம் விலை ரூ. 3-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜீவன் வாட்சு கம்பெனி,
(4-f) பிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.


**'குடி அரசு' 'திராவிடன்' பத்திரிகைகளை வாங்கி வாசியுங்கள்.**

## 'குடி அரசு' புத்தகாலயம்

வேதப் புரட்டை வெளியாக்கும்,

| | |
|---|---|
| 'ஞான சூரியன்' 2-ம் பதிப்பு, | ... 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | ... 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். | ... 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. | ... 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு. | ... 0—2—0 |

விலாசம்:—

மனேஜர், "குடி அரசு" புத்தகாலயம், ஈரோடு.



ஏழு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்த வைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்த வைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! முப்பு சேர்ந்த மருந்துகள்.

பலனில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

நீங்கள் என்றுமழியாத இளமைப்பருவத்தை அடையவேண்டுமானால்,

சி. எம், சாமி மகா வீரிய

# தங்க பஸ்பம்

சாப்பிடுங்கள். தாதுபுஷ்டியில் மன்மதனுக்கொப்பாவீர்கள்,

தாது புஷ்டியில் [illegible]. மகான் அருளால் கிடைக்கப்பட்டது. வெள்ளை, வெட்டை, கருப்பு, [illegible], மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சூலை முதலிய வியாதிகளும் நீங்கும். அழிந்துபோன ஆண்மையையும் இழந்த பலத்தையும் இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வயோதிகனை வாலிபனாக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்,

48 நாள் பஸ்பம் ரூ. 20.  24 நாள் பஸ்பம் ரூ, 10.

1. தங்கள் மகா வீரிய தங்கபஸ்பத்தைப்பற்றி எனக்குத்தெரிந்தமட்டில் இதற்கு நிகரான மருந்து கிடையாது என்பதை மனப்பூர்வமாய்ச் சொல்லுகிறேன். தாங்கள் நீடூழியாய் இருக்க வேண்டியது. செப்ப [illegible] தங்கள் மருந்தினால் பிழைத்து ஜீவிப்பார்கள்.

10—1—29.  ரும. துரைப்பாண்டிய வீரணம்பலம், இராமனுதபுரம்.

## குரு அப்ரேக் செந்தூரம்—நீரழிவுக்கு,

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை [illegible] தேகஎரிப்பை மாற்றி ரத்த விர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல [illegible] நீங்கும். [illegible]. 24 நாள் புட்டி 1 க்கு ரூ. 15. 48 நாள் புட்டி 1 க்கு ரூ. 30.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

சிலோன் முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.

சித்த ஆயுள்வேத வைத்தியாசிரியர்

C. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை. பழனி. S. I.

(12-b)


### சாதிப் பட்டத்தையும் சமயக் குறிகளையும் விட்டவர்கள்

சிங்கப்பூர் வாசிகளாகிய அடியிற்கண்ட நண்பர்கள் தங்கள் சாதிப் பட்டத்தையும், சமயக் குறிகளையும் நீக்கிவிட்டதாக திரு. கே. வி. சரவணன் தெரிவிக்கிறார்:—

திருவாளர்கள்

சி. ரா. சி. அடைக்கல மண்டோர், ப. வெ. வெள்ளைச்சாமி, ப. வெ. பெரியையா மல்லாங்குடி (புதுக்கோட்டை) அ. முத்து கருப்பன், அ. அடைக்கலவன், சே. ரா. விலாவன், சா. மு. முத்தப்பழனி, சா. அ. விலாவன், பெ. ஆண்டியப்பன், ந. ஜ. வெ. முத்துப்பழனி, அ. மு. சின்னர் விராயச்சாலை (புதுக்கோட்டை) அ. சின்னன் பொன்னனிப்பட்டி, ம. வெள்ளச்சாமி அம்மம்பட்டி. வ. பெரம்பன், பூ. வண்ணமுடையான், பூ. பூமன் மலையடிப்பட்டி. கொ. அண்டக்கன் தென்னட்டாங்குறிச்சிபட்டி, சி. க. அழகப்பன் பிராவயல். அ. பழனி கோனுபட்டு. வெ. விலாவன் வாரப்பூர். ரா. ராமலிங்கம் திருச்சுழி. சே. இ. சேவு கண்ணைப்பேட்டை, கொ. நடேசன் குறிச்சி, செ. சித்திரவேலு உள்ளிக்கோட்டை, கு. மாரிமுத்து தொண்டயக்காடு. பூ. பெ. குப்புசாமி, ஆ. கு. காத்தான் தவாக்குறிச்சி, வ. ராமசாமி ஒழுனி, (நாகபட்டிணம்) ஆ. காத்தான் திருவிடங்கன், பி. ஆ. பாலன் தில்லைவிளாகம், கோ. வி. சரவணன் பாப்பிஞசம்.

---

### ஓயாமல் ஓடும் இயந்திரம்

தஞ்சாவூர் பள்ளி அக்கிரகாரம் சைகிள் கம்பெனி திரு. பி. சுந்தரம் என்பவரின் 20 வருட விடாமுயற்சியின் பயனாக ஓயாமல் ஓடும் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது தண்ணீர் இறைத்தல், எலக்ட்ரிக் லைட் போடுதல், அரிசி அரைத்தல் முதலிய காரியங்களுக்குப் பயன்படும். மெஷினில் உண்டாகும் கரண்ட் பாக்ஸைக்கொண்டு எண்ணெயோ நெருப்போ முதலிய எவ்வித செலவுமின்றி இரவு பகல் ஓயாமல் ஓடும் விபரம் விரும்புவோர் B. சுந்தரம் சைக்கிள் கம்பெனி பள்ளியக்கிரகாரம் தஞ்சை என்ற விலாசத்திற்கு எழுதுக என்று திரு, B. சுந்தரம் அறிவிக்கிறார்.

---

### நாவுக்கரசு நற்சபை.

ஆத்தங்குடி முத்துப்பட்டணம் நாவுக்கரசு நற்சபையின் மூன்றாவது ஆண்டுவிழா சித்திரைத் திங்கள் 28-ம் நாளில் காரைக்குடி "ஊழியன்" ஆசிரியர் ராய. சொக்கலிங்கன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

### பார்ப்பனீயம் ஒழிந்த சடங்கு.

10-5-29 தேதியில் சாம்பான் வயி. ராம. கடை வழுண்டு திரு சோலையப்ப பிள்ளை அவர்கள் தமது தாயார் திதியை பார்ப்பனீயமின்றிச் செய்தார். அப்போது சுமார் 100 பேருக்குச் சமபந்தி போஜனம் அளித்தார் என்று ஓர் சுயமரியாதைத்தொண்டன் அறிவிக்கிறார்.

# வர்ணாசிரம தர்மமும் அதன் சர்வகலாசாலையும்

கைவல்லியம் எழுதுவது.

பார்ப்பாரை நாங்கள் திட்டுகிறோமென்று நம்மவர்களிற் சிலர் சொல்லுகிறார்கள். நாங்கள் பார்ப்பார்களைக் குற்றம் சொல்லுவதற்குத் தகுந்த காரணங்களிருக்கின்றனவா? அந்தக்காரணங்கள் குற்றம் சொல்லுவதற்குப் போதுமானவையா? என்பதை அறிவும் கூர்மையும் சேர்ந்த உணர்ச்சியுடைய கண்ணினால் அவர்கள் கவனித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு ஜனசமூகம் உயிருடனிருக்க வேண்டுமானால் அதனிடம் உண்மைக்குப் பரிந்து பேசும் குணமிருக்க வேண்டும். உண்மைக்குப் பரிந்து பேசுவோர்கள் சொல்வதைச் சரியாகச்சீர்தூக்கிப்பார்த்து அந்த உண்மையைச் சனசமூகங்களுக்குள் வற்புறுத்திச் சொல்லுகிறவர்கள் இல்லாமல் போய் விட்டதினாலேதான் நமது ஜாதி ஆசாரங்களில் எத்தனையோ குறுகுதலும் அநாகரிகமும் மடமையும் மிகுந்து இதனால் பல நூற்றாண்டுகளாக நேர்ந்த அவமானமும் அறியாமையும், கஷ்டமும் நம்மை விட்டுப் போக மார்க்கமில்லாதிருக்கிறது.

மேல்நாட்டில் அப்படியில்லை. அங்கே உண்மையை மனதுக்குள்ளே அடக்கி வைக்காமலும், அவன் வாயை, இவன் கையை, மற்றவன் அதிகாரத்தை, வேறொருவனுடைய தாக்ஷண்யத்தை கவனிக்காமலும் வழக்கத்தில் காட்டுகிறார்கள். ஜனக்கட்டிலும் ராஜ்ஜியத்திலும் ஏதேனும் குற்றம் வெளிப்பட்டால் அதைப் பொது ஜனங்கள் உண்மை விளக்கால் சோதித்துப் பார்க்கும் வேலையில் சமயமோ சாஸ்திரமோ குறுக்கே வராது. பொது ஜனங்களின் நன்மையை உத்தேசித்தும் அவசியத்தை உத்தேசித்தும் திருத்த வழியுண்டு. இதனால் கிடைக்கும் சக்தியும் விடுதலையும் எல்லாருக்கும் பயன் பட்டு நம்பிக்கையையும் தைரியத்தையும் உண்டாக்குகின்றன. இந்த உண்மை சமயத்திலும் சாஸ்திரத்திலும் வேத மந்திர சுரங்க குகையிலும் மறைந்து கிடக்கவில்லை. திறந்த வெளியில் எல்லோரும் காணும்படி தானும் வளர்ந்து பிறரையும்வளரும்படிச் செய்கிறது. நம்முடைய பழைய தேவலோகத்தை விட அந்த நாட்டினிடமே நமக்கு இப்பொழுது நெருங்கிய சம்பந்தமேற்பட்டிருக்கிறது. இவர்களைப் போலவே நாமும் ஆகவேண்டுமென்கிறோம்; இவர்களைப்போலவே வாழவேண்டுமென்கிறோம்; அதற்காகச் சுயராஜ்ஜியமும் கேட்கிறோம். அவர்கள் தங்கள் முயற்சியால் உண்மையைக்கண்டு அறிவுச்சுடர் கொளுத்திய உலக வழியில் செல்லுகிறார்கள். அந்த மனுஷ்ய ஜாதியுடன் நாம் சமநடையாகச் செல்ல விரும்பினால் நம்முடைய மூடப்பழக்க வழக்கங்கள், ஆசார அநிநய நடிப்புகள், மற்றுமுள்ள அஞ்ஞானங்கள் ஆகியவைகளையெல்லாம் கூச்சப்படாமல் வீசி எறிந்து விடவேண்டுமென்றே சொல்லுகிறோம்.

பார்ப்பார்களைக் குற்றம் சொல்லுகிறோம் என்று சொல்லுகிறவர்கள் இங்கு ஒரு முக்கியத்திலும் முக்கியமான விஷயத்தை கவனிக்க வேண்டுகிறோம். மதுரை வருணாசிரமதரும மகாநாட்டுத்தலைவர் டி. ஆர். ராமச்சந்திர ஐயர் நேரூருக்கும் திருச்சிக்குமிடையே காவேரி நதி ஓரமாய் எல்லா வசதியுமுடைய ஒரு இடத்தில் சர்வகலாசாலை ஸ்தாபிக்க உத்தேசித்திருக்கிறார். அதற்கு 40, 50 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலம் கொடுப்பதாகப் பல கனவான்கள் வாக்களித்திருக்கிறார்களாம். அந்தக்கலாசாலை கட்டுவதற்கு கமிட்டிகளும் நியமிக்கப் பட்டுப் பணவசூல் செய்ய ஏற்பாடும் செய்திருக்கிறார்களாம். அந்தப் பாடசாலையில் சகல வருணத்தார்களையும் சேர்த்துக் கொள்ளுவார்களாம். ஆனால் பிராமணர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படும் வேத சாஸ்திரம் மட்டும் மற்ற ஜாதிக்காரர்களுக்குக் கற்றுக் கொடுக்கப் படமாட்டாதென்றும் தெரியப்படுத்துவதாக மே மாதம் 21 தேதி "சுதேசமித்திர"னிலிருக்கிறது.

பார்ப்பார ஜாதிக்கு மட்டும் வேத சாஸ்திரம் கற்றுக் கொடிப்பதற்கும் மற்ற ஜாதிக்காரர்களுக்குக் கற்றுக் கொடுக்க மாட்டேன் என்பதற்கும் காரணமென்ன? சூத்திரனுக்கு வேதம் சொல்லி வைக்கப்படாதென்கிற காரணம் தவிர வேறு காரணம் ஏதாவதுண்டா? இந்த இடம் தான் நாங்கள் பார்ப்பார்களை குற்றம் சொல்லுவதற்கு மூலஸ்தானம். இதிலிருந்தே எல்லா விவகாரமும் உண்டாகின்றன. இதை யார் கவனிக்கிறார்களோ அவர்கள் எங்களை விட இன்னும் கண்டிப்பாய்க் குற்றம் சொல்லவே அவர்களுடைய மனித அறிவு புறப்படும்.

பார்ப்பார்கள், உயர்ந்த ஜாதி என்கிற பெருமையையும், பிராமணன் என்னும் தன்மையின் ஏமாற்றையும், உத்தியோக அதிகாரத்தையும்' வக்கீல் தொழிலின் ஆதிக்கத்தையும், லோக குருக்க ளென்னும் பாத்தியதையையும், தேசாபிமானம், தேச சேவை என்று எடுத்துச் சர்க்காருக்குக்காட்ட காங்கிரஸ் சபையையும் 'பார்ப்பனர்களின் தன்னலக் கொடுமைகளை எடுத்துக்காட்டும்சுயமரியாதைக் காரர்களை குற்றம் சொல்ல திரு. கல்யாண சுந்தரமுதலியார் வகையறாக்களையும்வைத்துக்கொண்டு, பக்தி போய் விட்டது, கலியும் வந்துவிட்டது, வருணாச்சிரம தர்மம் கெட்டுப் போய் விட்டது நாஸ்திகம் பெருத்துவிட்டது, ஆஸ்திகத்தைக் கொண்டு வரவேண்டுமென்று சமயோஜிதம் போல் சொல்லித் தந்திரமாகப் பலரிடம் பணம் வசூல் செய்து சர்வகலாசாலை கட்டி கவுன்சில் மெம்பர் வேலையிலிருந்து கள்ளுக்கடை வேலை வரையிலும் தள்ளப்பட்ட சாஸ்திரிகள் ஆச்சாரிகளின் பிள்ளைகளுக்குப் பிழைப்பையும் உண்டாக்கிக் கொள்ளுவார்கள்.

அந்தச் சர்வகலாசாலையில் பார்ப்பானுக்கு மட்டும் வேதசாஸ்திரம் சொல்லிக் கொடுத்து மற்ற வருணத்தார்களுக்குச் சாஸ்திர கலைகள் சொல்லிக் கொடுக்கப்படுமென்று சொல்லுகிறார்களே, பார்ப்பானுக்குச் சொல்லிக் கொடுக்கப்படும் வேதசாஸ்திரம் மற்றவர்களுக்கும் ஏன் சொல்லிக் கொடுக்கப்படாது? கடவுளால் கொடுக்கப்பட்ட வேதம் ஒரு ஜாதிக்காரர்தான் படிக்க வேண்டும் என்றும் அதே கடவுளுக்கும் அந்த வேதத்திற்கும் கட்டுப்பட்ட மற்றவருணத்தார்களுக்கு கற்றுக் கொடுக்கப்படாதென்றும் சொல்லுவதற்கு அந்த வேதத்தை உண்டு பண்ணின கடவுளிடமிருந்தே வித்தியாசம் ஏற்பட்டு விட்டதா? பார்ப்பான் பக்குவமுடையவன் மற்றவர்கள் பக்குவமடையவில்லை என்னும் நிச்சயத்தைக் கடவுள் கற்பித்து விட்டாரா? உலகத்திலுள்ள ஒவ்வொரு மதஸ்தரும் அந்த அந்த மதக்கடவுளாலேயே அவரவருடைய வேதங்கள் கொடுக்கப்பட்டன வென்று சொல்லுகிறார்கள். அவரவர் வேதங்களை அவர்களைச் சேர்ந்த எல்லாருக்கும் சொல்லியும் கொடுக்கிறார்கள். நமது வேதமும் நமது கடவுளால் கொடுக்கப்பட்டதென்றே நாமும் சொல்லுகிறோம் என்றாலும் பார்ப்பான் தவிர வேறு யாருக்கும் வேதம சொல்லிக் கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். இதற்கு காரணமென்ன? பார்ப்பானுக்குத்தான் வேதம் வரும் மற்றவர்களுக்கு வேதம் வராதென்று கடவுளே நிச்சயஞ் செய்து விட்டாரா? அப்படியானால் வேதம் படித்த பார்ப்பாரெல்லாம் மோக்ஷத்திற்கு பக்குவமடைந்ததாகக் காணோமே. வேதமும் அதன் மந்திர உச்சரிப்பான சுரங்களும் தவறி விட்டாலும் அவர்களுக்குத் தலைவலி வராமலிருப்பதற்கு காப்பிக்குடிதவறுவதில்லையே 'வேதம் படிப்பதே பாப்பார்களுக்குத் தொழில் வேறு தொழில் அவர்கள் செய்யவும் படாது, வரவும் வராது' என்று சொல்லுவதற்குமில்லை. நீலகிரி மலையில் கூட செருப்புக்கடை வைத்திருப்பவனும் பார்ப்பானே.

கோவிலில் கும்பாபிஷேகம், உற்சவம், பிரார்த்தனை, மந்திரகிரியைகள், பிராயச்சித்த கர்மங்கள் முதலியவைகளுக்கு வேதபாராயணம் சொல்ல வரும் பார்ப்பார்கள் ஒரு அணா இரண்டணாவிற்குச் சண்டைபோட்டு 32 பல்லையும் காட்டி கெஞ்சுவதைப் பார்க்கையில் இவர்கள் மோக்ஷப் பக்குவம் அரையணாக்கூலிக்கு அதிகம் கெஞ்சுபவனை விட மேலென்று எந்த விதத்தில் சொல்ல முடியும்? பிராமணசமாராதனைகளில் பார்ப்பார்கள் வாழைப் பழம் வடை பலகாரங்களை இலையிலிருந்து எடுத்து மூட்டையில்வைத்துக் கொண்டு சமயம் கிடைத்து ஆள் ஏமாந்தால் மேலும் வாங்கித் தின்று விட்டு மூட்டையை வீட்டிற்கு எடுத்துக் கொண்டு போகும் பார்ப்பாருக்குள்ள பாரமார்த்திக பக்குவமானது பிச்சைக்காரர் சமாராதனையில் வாங்கினசோற்றை மறைத்துக் கொண்டு பின்னும் சட்டியை நீட்டுவதை விட மேலென்று எப்படிச் சொல்லுவார்கள்? எச்சில் இலையிலிருந்து பலகாரத்தை மூட்டை கட்டிக்கொண்டு பார்ப்பான் போவதை கடவுள் தருமத்தை நிலைநிறுத்த ராமச்சந்திர ஐயர் அவதாரம் பண்ணின நாடான மலையாளத்தில் தான் விசேடமாகப் பார்க்கலாம்.

மதுரை வருணாச்சிரம மகாநாட்டில் தலைவர் டி. ஆர். ராமசந்திர ஐயரை அவதார புருடரென்றும் வேதத்தை நிச்சயப்படுத்த ஆதி சங்கராருக்கும் அடுத்த சங்கராராக வந்திருக்கிறவரென்றும் பார்ப்பார்கள் சொன்னார்கள். வேதத்தை நிச்சயப்படுத்த வந்தவரும் கடவுள் அவதாரமும் என்று சொல்லப்பட்ட டி. ஆர். ராமச்சந்திர ஐயர் தமக்கு எழுபது வயதாகியும் வக்கீல் வேலையை விடவுமில்லை வாங்கும் பணத்திற்குச் சரியாய் உழைக்கவு முடிவதில்லை பூமிகள் வாங்கி சொத்து சேர்ப்பதே அவர் படித்த வேத பாரமார்த்திகமாக விருக்கிறது,

காலையில் காவேரியில் குளிக்கையிலேயே எந்த வீட்டில் இழவு கருமாந்திரம், எங்கு தக்ஷிணை, எங்கு சாப்பாடு என்று நினைத்து ஸ்நானம்பண்ணி, ஆள்வந்து கூப்பிடுகிறவரையிலும் ஆற்றோரமுட்கார்ந்து மொணமொணப்பதோடு வைதீக வேதப்படிப்பு முடிகிறது." பார்ப்பனர்களுடைய லௌகிகமோ இங்கிலீஷ் படிப்பதும் உத்தியோகம் சம்பாதிப்பதும் விவகாரங்களில் விவகாரங்களை உண்டாக்கி வக்கீல் தொழில் செய்து ஜீவிப்பதுமாகவல்லவோ இருக்கிறது, இவர்களுடைய நிலை இப்படியிருப்பது பிரத்தியக்ஷம். இப்படியிருக்கையில் பலரிடம் பணத்தை வாங்கி 'பார்ப்பாருக்கு மட்டும் வேதசாஸ்திரம் சொல்லிக் கொடுப்போம். மற்ற ஜாதிக்காரர்களுக்கு வேத சாஸ்திரம் சொல்லிக்கொடுக்கப்படமாட்டா'தென்று சொல்லுவதற்கு காரணமென்ன?

"அங்க மோராறும் அருமறை நான்கும் அருள் செய்து
பொங்குவெண் ணூலும் பொடியணி மார்பிற் பொலிவித்துத்
திங்களும் பாம்புந் திகழ்சடை வைத்தோர்
தேன்மொழி பங்கினன்..."

உண்டேசிவபெருமான், அவர் அளித்தது வேத சாஸ்திரம்என்று திருஞான சம்பந்தரும் சொல்லியிருக்கிறார். திருஞானசம்பந்தர் பெயரைக் கேட்ட

(இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க).

# கடவுள் இல்லையென்று நாங்கள் சொல்லவில்லை.

## ஆனால், வேண்டாமென்றே சொல்லுகின்றோம்.

திரு. அய்யாமுத்து எழுதுகிறார்.

சுயமரியாதைக் காரர்கள் "கடவுள்" இல்லையென்று சொல்லி விட்டார்கள் என்று ஆஸ்திகக் கூலிகளால் பிரசாரம் செய்யப்படுகின்றது. சுயமரியாதைக்காரர்கள் கடவுள் இல்லை என்று சொல்லி விட்டதாகவும் அதைப்பாமரர் நம்பி கடவுள் இல்லையென்று மனதில் கொண்டு விடுவார்களாகில் மக்கள் அறவழியினின்று பிறவழிசென்று மாக்களாகி விடுவர் ஆதலின் கடவுள் எண்ணத்தை நிலைநாட்டவும் அதன் மூலம் அறநிலையைக்காப்பாற்றி மக்களை மக்களாகவே வாழச் செய்ய வேண்டியும் ஆஸ்திக சங்கம் அமைப்பட்டதாகவும் பறை சாற்றப்பட்டது.

கடவுள் என்பதற்குப் பலர் பலவிதமாகப் பொருள் கூறுகின்றனர். சிலர் அதைச் சிவன் என்றும், சிலர் விஷ்ணு என்றும், சிலர் பிர்மா என்றும், சிலர் தேவன் என்றும் சிலர் தேவி என்றும், சிலர் சக்தி என்றும் பலவாருகப் பெயர்கூறி அழைக்கின்றனர். மற்றுஞ்சிலர் பெருஞ்சோதி என்கின்றார். வேறு சிலர் அதை ஒரு சட்டம் என்றுங் கூறுகின்றனர். பொதுப்படக் 'கடவுள்' என்று கூறினும், அதைச் சிறப்பிக்குங்கால் பெயர் பல கூறி அழைக்கின்றனர். இங்கு பெயர்ச்சண்டை ஏற்படுகின்றது. "என் சமயமே மெய்ச்சமயம்" என்று கூறி ஒவ்வொருவரும் பிறரைத் தமது சமயத்தைத் தழுவுமாறு கூவி அழைக்கின்றனர். இந்த சமய பிரசாரத்தால் காலந்தோறும் பற்பல சண்டைகளும், அதனுலாய உயிர்ச்சேதங்களும் சரித்திர வாயிலாகக் கண்டிருக்கிறோம். 'கடவுள்' என்னும் சொல் இன்பத்தைக் காட்டிலும் துன்பத்தையே பெரிதும் விளைத்துள்ளது என்பதற்குச் சரித்திரம் சான்று கூறும்.

கடவுளின் பெயர்ச்சண்டையை விடுத்து இனி கடவுளின் குணச்சண்டைக்கு வாருங்கள், கடவுளும் நானும் ஒன்றே எனவும் அளவிலல்லது குணத்தில் பேதமில்லை எனவும், எனதறியாமையைப் போக்கி அறிவுச் சுடர் கொண்டு என்னை நான் அறிவேனுகில் கடவுளுக்கும் எனக்கும் பேதமற்ற தன்மையை நான் காண்பேன் எனவும் இந்து மத-வேதாந்த-அத்வைத-நாஸ்திகர் கூறுகின்றனர். பிற சித்தாந்திகள் கடவுள் வேறென்றும், ஆன்மா வேறென்றும் கூறுகின்றனர். எல்லா 'ஆஸ்திகர்'களும் கடவுள் மனம், மொழி, காயங்களுக்கு எட்டாதவர் என்றும், காரண காரியங்களால் அறியப்படாதவர் என்றும், வாக்கினுலே விவரித்துக் கூறப்பட முடியாதவர் என்றும், ரூபமற்றவர் என்றும், காருண்யமுள்ளவர்—கருணைக்கடல் என்றும் பலவாருகக் கூறுகின்றனர். மற்றும் கடவுள் சர்வ சக்தியுள்ளவர் சகல இடத்திலும் காற்றுப்போல் நிறைந்துள்ளவர் என்றும் கூறுகின்றனர்.

கடவுளன்றி உலகத்தில் ஒரு காரியமும் நடவாதாம். கடவுள் விதித்த படியே எல்லாம் நடைபெறுமாம். இதைச் சொன்ன வாயே அடுத்த நிமிடத்தில் கடவுள் விருப்பத்துக்கு மாருக நடவாதே என்றும் கடவுள் ஆணைக்கு மீறினுல் நரகத்தை யடைவாய், துன்பமுறுவாய் என்றும் சொல்லுகிறது. "அடே கடவுள் விதித்தபடியும் ஆணைப்படியும் எல்லாம் நடப்பதென்று சொன்னுயே! அவ்விதியையும் ஆணையையும் மனிதன் மீறுவதாய் இருந்தால் கடவுளைவிட மனிதன் மீறிய சக்தி படைத்தவன் என்றல்லவா ஏற்படுகிறது? என்று கேட்டால் அது நாஸ்திகமாம்! கடவுளை இல்லையென்று நாங்கள் சொல்லவில்லை. ஆனுல் இந்த ஆஸ்திகனே—கடவுள்தன்மை அறியாதவனே—கடவுளுக்கு ஒரு சக்தி கற்பித்து அக்கடவுளால் ஆக்கப்பட்ட "நீ அச்சக்தியை மீறுதே" என்றும் கூறும் முகத்தான் அந்தக் கடவுளை இல்லாதவர்போல் செய்துவிடுகின்றான்.

கடவுள் காருண்யமுள்ளவர் என்றும் சொன்னுன். எரிமலைகளும், கடல் கொந்தளிப்புகளும், வெள்ளப் பெருக்குகளும், கொடுமையான வெப்பங்களும், தானியப் பயிர்களை நாசஞ்செய்யும் வெட்டுக்கிளிகளும், மனிதர் உயிரைப்போக்கும் விஷக்காற்றுகளும் எப்படி வந்ததென்ருல் அது கடவுள் தம்மை ஆன்மாக்கள் மறவாதிருக்கும்பொருட்டு தம்மால் காலாகாலங்களில் தோற்றுவிக்கப்பெறும் திருவிளையாடல்கள் என்கின்றான். பிறரை இம்சிப்பதன் மூலம் தான் கடவுள் தம்மை நிலைநாட்டிக்கொள்ள வேண்டிய நிலையிலிருக்கிறார் என்ற 'ஆஸ்திக வாதம்' கடவுளால் மக்களுக்கு இன்பத்தைக்காட்டிலும் பெரிதும் துன்பமே ஏற்படுகிறது என்ற உண்மையை அறிவுள்ளவர் புத்தியில் படச்செய்யும்.

சகலத்தையும் படைத்துக் காத்து அழிக்கும் கடவுளின் உலகத்திலே இந்துமதப் பேய் பிசாசுகளும், கிறிஸ்தவச் சாத்தான்களும், முகம்மதியச் சைத்தான்களும் எப்படித் தோன்றினவென்று 'ஆஸ்திகர்' சொல்லவில்லை. ஒருகால் விஸ்வாமித்திரனுடைய தவத்தைக்கெடுக்க மேனகை வந்தது போலவும், தேவர்களுடைய வேள்வியைத் தாடகை அழிக்கவந்தது போலவும் தேவர்களை இம்சிக்க அரக்கர் வந்ததுபோலவும், மக்களை இம்சிக்கவும், மக்களுடைய கடவுள் தன்மையைப்பரிசோதிக்கவும் பேய்கள் சிருட்டிக்கப்பட்டனவோ என்னவோ அவர்கள் கூறட்டும். தாடகை சம்ஹாரனும் அரக்கரை யழித்தவனும் எப்போதுவந்து இப்பேய் பிசாசுகளை அழித்தொழிப்பானே? அது ஆஸ்திகர்களுக்குத்தான் தெரியும். கடவுள் நெறிக்கு மாருக மக்களை மாற்றவிக்கும் சாத்தான் யாரால் தோற்றுவிக்கப்பட்டானே!

இவ்வளவு பெயர்களும், அரும் பெரும் குணங்களும், சக்திகளும், அடைமொழித்திரட்டுகளும் சூட்டப்பட்ட கடவுள்தத்துவங்கள் பெரிய பெரிய ஏடுகளிலும், பெரிய பெரிய வாய்களிலும் காணப்படுகின்றன. ஆனுல் இவையல்லாத சில்லரைச்சாமிகள் கோடானகோடி. ஒவ்வொரு சாமிக்கும், பிறப்பு, வளர்ப்பு, திருவிளையாடல், சில தனிப்பட்ட குணங்கள், சக்திகள், புராணங்கள், படலங்கள், ஸ்தலங்கள், அதன் மகிமைகள், வைப்புகள், பள்ளியறைகள், தேர்கள், திருவிழாக்கள், தாசிகள் நாட்டியங்கள், பாட்டுகள் தாளங்கள், மேளங்கள், தர்மகர்த்தாக்கள், ஆலயங்கள், கதவடைப்புகள், கேசுகள், ஆட்டுக்கிடாய்ப்பொங்கல்கள், அபிஷேகங்கள், வேலுகள், வாகனங்கள், காவடிகள், பந்தசேர்வைகள், கள்ளுகள், சாராயங்கள், கஞ்சாக்கள், உடுக்கைகள், கம்பங்கள், காகங்கள், கண்ணடக்கம், அறைமூடி, ரவிக்கை, தாலி, கம்மல், சங்கிலி, ஒட்டியாணம், மூக்குத்தி, பொட்டு, மினுக்கு, பட்டுச்சேலை, சோமன் எல்லாம் உண்டு. இவைகளைக்காப்பாற்ற பார்ப்பார சாஸ்திருக்கள், அர்ச்சகர்கள், ஆஸ்திகப்பிசாசுக் கூலிகள் எல்லாம் உண்டு.

இன்னும் பல ஆவேசச்சாமிகள், சாட்டையால் அடித்துக் கொள்ளும் சாமிகள், உடலெல்லாம்முள்ளுத்தைத்துக்கொள்ளும் சாமிகள், குண்டத்தின்மீது நடக்கும்சாமிகள், ஜலத்தின்மீது மிதக்கும் சாமிகள், வேப்பிலைதின்னும் சாமிகள், நரகல் தின்னும் சாமிகள், ஆணி இரும்பு முதலியவைகளை விழுங்கும் சாமிகள், நெருப்புச்சட்டியை எடுத்தாடும் சாமிகள், தலையில் குடம்வைத்துக்கொண்டுஆடும் சாமிகள், உடம்பெல்லாம் விபூதி எடுத்துக்கொடுக்கும் சாமிகள், பிள்ளை வரம் கொடுக்கும் சாமிகள், விதவைகளுக்கு அந்திபகலாய் உபதேசம் செய்யும் சாமிகள், வாக்குப்பலிக்கும் சாமிகள், கற்பூரத்தை சுடுக்கென்று விழுங்குஞ் சாமிகள், ஊரார் சொத்தை உப்புப் புளி யில்லாமல் தின்னும் சாமிகளும் பலப்பல வுண்டு.

கடவுள் முதலாக, சிவன், விஷ்ணு, ருத்திரன், பிர்மா ஈருக பழனியப்பன் நடராஜன், பெத்தப்பெருமாள், ரங்கநாதன் முதல்கொண்டு நாட்டுராயன், கருப்பராயன், மாரியாயி, காளியாயி ஈரையுள்ள மக்களின் அறிவையும் பொருளையும் நாசப்படுத்தும் சகல கடவுள்களும் உண்டு, உண்டு, உண்டெனப்பலமாகக்கத்துகிறோம்.

ஆனுல் மனிதனுக்குப் பிரயோஜனமில்லாத, மனிதன் இன்பங்களைப் பெருக்காத, மக்களுக்குள் ஒற்றுமையையுண்டுபண்ணுத, மக்களுக்குள் வேற்றுமையைநீக்காத மக்கள் பொருளையும் அறிவையும் நேரத்தையும் காலத்தையும் மனதையும் பாழாக்கி உலகத்தில் அறம்போக்கி மறம் வளர்க்கும் இக்கடவுள்கள் எண்ணம் வேண்டாமென்றுதான் சொல்லுகிறோம்.

கடவுள் எண்ணத்தினுல்தான் ஒருவன் ஒழுக்கத்துடன் இருக்கமுடியும் என்று நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம். இத்துணை யுகங்களாக ஏற்பட்ட ஒழுக்கமற்ற காரியங்கள் கடவுள் எண்ணமுள்ளவர்களாலேதான் ஏற்பட்டவையென்று அங்களுக்குத்தெரியும். ஆதலால் அப்பாழான கட

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க)

# சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாடு

## பட்டுக்கோட்டையில் என்றுமில்லாத உற்சாகம்.

### நூற்றுக்கணக்கான கொம்பு தப்பட்டைகள்.

### ஆயிரக்கணக்கான ஆதி திராவிடர்கள்.

## சுயமரியாதை ஆசிரமத் திறப்புவிழா.

வரவேற்பு.

மே மீ 24-ந்தேதி வெள்ளிக்கிழமை இரவு 10 மணி வண்டியில் மகாநாட்டுத் தலைவர் திருவாளர். எஸ். குருசாமி அவர்களும், மற்றும் திருவாளர்கள். வ. ஆர். சிவானந்தம், கந்தசாமிக்கவுண்டர், எஸ். சாமிநாதன், வேலாயுதம், ஈ. வெ. ராமசாமி ஸ்ரீமதி நாகம்மாள், கோவை, சி. பி. சுப்பையா, சே. வி. அழகர்சாமி, சாமி. சிதம்பரனார், கி. ஆ. பெ. விஸ்வநாதம், காரைக்குடி சொ. முருகப்பர், தங்கன் சொக்கலிங்கம் பண்டித்தேவர், சிவகங்கை வக்கீல் ராமச்சந்திரன் பி. ஏ. பி. எல், நாகர்கோயில் சோமசுந்தரம் பி. ஏ. வக்கீல் பி. சிதம்பரம் பிள்ளை பி. ஏ. பி. எல்., ஏ. சங்கரன் பிள்ளை பி. ஏ. பி. எல்., மாஜி இஞ்சினியர் திருவம்பலம் பிள்ளை, திருநெல்வேலி. ராமநாத தேசிகர், டாக்டர் எம். ஏ. நெட்டோ ஜி- ஜி. எஸ். ரங்கநாதம், தக்கோலம் செல்லப்பா, பூவாளூர் செல்வக்கணபதி, டி. பரமசிவம், பொன்னம்பலனார், வாலாஜாபாத் டபள்யூ. டி. மாசிலாமணி, அருப்புக்கோட்டை ரு. ஆ. முத்து நாடார், நாகை சாமுவேல் பிள்ளை, சென்னை என். தண்டபாணி, சேலம் செல்லாண்டி, திருச்சி பகவதி, இராவணதாஸ், ஏ. பாலசுப்பிரமணியம், கள்ளிக்குடி ஜின்னிங் பாக்டரி நாயுடு, எம். சுப்பையா, ஆர். முத்துசாமி வி. ராஜகோபால், கும்பகோணம் ஆர். சி. வெங்கிட்டராமநாயுடு, வி. தாமோதரன் பி. ஏ. ராமச்சந்திர நாயுடு, பாப்பு சாயபு, நாகலூர் வி. கலியாணசுந்தரம், மாயவரம் டி. சின்னையா, சி. நடராஜா, எஸ். சக்கிரவர்த்தி, எஸ். வி. லிங்கம், சி. வேலாயுதம், ராமையா நாயினூர், எஸ் ராமலிங்கம் மூவாலூர் ராமாமிர்தம்மாள், நாகை ஜெ. கிருஷ்ணமூர்த்தி, நாகை மணி, சே. முத்து, எம். ரெங்கசாமி, தில்லை செட்டியார், கானியப்பன், டி. ஜயராம், ஆர். வைத்தியலிங்கம், எஸ் ராஜகோபால் முதலியோர்கள் தஞ்சை வந்து சேர்ந்ததும் திருவாளர்கள் நடராஜன் கோவிந்தசாமி முதலியோர்களால் வரவேற்கப்பட்டு, சிற்றுண்டி அளிக்கப்பட்டு, ஸ்பெஷல் கார்களிலும் பஸ்களிலுமாக அழைத்துச் செல்லப்பட்டார்கள். பட்டுக் கோட்டைக்கு முன்னால் பாளையம் என்கிற பாகத்தில் ஆயிரக்கணக்கான ஆதிதிராவிடர்களும் நூற்றுக்கணக்கான கொம்பு தப்பட்டைகளும், நாகசுரம், பாண்டு வாத்தியங்களும் முழங்க சுமார் 2000 ஜனங்கள் வாலிபர்களும் பெரியோர்களும் பெண்களுமாக ஜே, சப்தத்துடன் வரவேற்று வண்டிகளை நிறுத்தி வந்திருந்தவர்களுக்கெல்லாம் மாலையிட்டு நேரே ஊர்வலமாக திரு. வேணுகோபால் நாயுடு, பி. ஏ. பி. எல் அவர்களால் புதிதாய்க்கட்டப்பட்ட சுயமரியாதை ஆசிரமத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அப்புதிய கட்டிடத்தை திரு. ஈ. வெ. ராமசாமியாரைக் கொண்டு திறந்து வைக்கும்படி திரு. சே. வி. அழகர் சாமியார் கேட்டுக்கொள்ள திரு. ராமசாமியார் திரு. வேணுகோபால் அவர்களின் பொதுநல சேவையையும் பெருமையையும் ஆசிரமத்தின் முக்கியத்தையும் எடுத்துச் சொல்லி ஆசிரமத்தைத் திறந்து வைத்தார். உடனே, ஆதிதிராவிடர் சார்பாக திரு. மாரிமுத்து அவர்கள் சில வார்த்தைகள் சொல்லி மாலையிட்டதும், திரு. ரா. சௌரிராஜனால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு, ஜெ, கோஷத்துடன் மறுபடியும் சுமார் ஒன்றரை மைல் ஊர்வலமாக வழிநெடுக மாலைகளும், சந்தனம் கற்கண்டு பழங்களும் வழங்கப்பட்டு மகாநாட்டுக்கொட்டகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

கொடியேற்று விழா.

அங்கு சென்றதும் திரு. திருஞான சம்பந்தம் அவர்கள் திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்களை மகாநாட்டுக் கொடியையுயர்த்தும்படி வேண்டிக்கொள்ள, திரு. விஸ்வநாதன் அவர்கள் இயக்கத்தின் தத்துவத்தையும் கொடியின் பெருமையையும் சொல்லி கொடியை உயர்த்தினதும் எல்லோருமாக பெருத்த ஆரவாரத்தோடு தியாகராய மண்டபமென்னும் மகாநாட்டுக் கொட்டகைக்குள் பிரவேசித்தார்கள். மகாநாட்டுக் கொட்டகையானது சுமார் 5000 பேர் அடங்கக்கூடியதாகவும் பாகிதங்களாலும், துணிகளாலும் அலங்கரிக்கப்பட்டு திரு. பன்னீர் செல்வம் அவர்களுடையவும், திரு ராமசாமியார் அவர்களுடையவும், அவரது மனைவியார் நாகம்மாள் அவர்களுடையவும், பனகால் அரசர் அவர்களுடையவும் மற்றும் பல தலைவர்களுடையவும் படங்கள் சுற்றிலும் கட்டப்பட்டு சுயமரியாதைக் கொள்கைகள் கொண்ட வாக்கியங்களால் அலங்கரிக்கப்பட்ட … …களாலும் துணி எழுத்துக்களாலும் … சுற்றிலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பெரிய பெரிய கறுப்புப் பலகைகளில் முக்கிய கொள்கைகள் பற்றியும் தலைவர்கள் புகழைப் பற்றியும் எழுதி நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. மற்றும் கெஜத்துக்கொரு வளைவுகளும் தொடர்ந்த தோரணங்களும் பார்ப்பனர்கள் பிரமிக்கும்படியாக இருந்தன. கொட்டகை நிறைய பெண்களும் ஆண்களும் சுமார் 3000 பேர்களுக்கு மேலாகவே கூடியிருந்தார்கள்.

மகாநாடு சரியாய் 11-30க்கு துவக்கப்பட்டதும் திரு. ப. சு. தண்டபாணி அவர்கள் திரு. சொ. முருகப்பர் அவர்களை மகாநாட்டைத் திறந்துவைக்கும்படி கேட்டுக்கொள்ள, திரு. முருகப்பரவர்கள் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியும் மகாநாட்டைப்பற்றியும் அரைமணி நேரத்திற்குமேல் அருமையான சொற்பொழிவு நிகழ்த்தி மகாநாட்டைத்திறந்து வைத்தார். பிறகு சாப்பாட்டுக்காக சுமார் 12-30 மணிக்கு மகாநாடு கலைந்தது.

தலைவரைப் பிரேரேபித்தல்.

மறுபடியும் பகல் 3 மணிக்கு மகாநாடு கூடினதும் வரவேற்புத்தலைவர் திரு. ப. சு. தண்டபாணி அவர்கள் வரவேற்புச் சொற்பொழிவை நிகழ்த்தினார். இது சமயத்தில் தஞ்சையிலிருந்து பி. டி. ராஜன், W. P. A. சௌந்திரபாண்டியர், ஐ. குமாரசாமிபிள்ளை கணபதிராவ் பிள்ளை முதலானவர்கள் பந்தலுக்குள் நுழைந்ததும் பெரிய கரகோஷத்துடனும் ஜெ சப்தத்துடனும் வரவேற்கப்பட்டார்கள். வரவேற்புத்தலைவரின் உபந்நியாசம் முடிந்ததும் மகாநாட்டுத் தலைவரை சுமார் 20 கனவான்கள் வரை பிரரேபித்து ஆமோதிக்க கடைசியாக திரு. ஈ. வெ. ராமசாமியார் ஆதரிக்கும் போது பேசியதாவது:—

சகோதரி சகோதரர்களே! இந்த மகாநாட்டுக்கு திரு. குருசாமி அவர்களைத் தலைமை வகிக்க ஆதரிப்பதில் நான் அதிக மகிழ்ச்சியடைகிறேன். இப்பேர்ப்பட்ட தொண்டர் மகா நாட்டிற்கு அதுவும் முதன் முதலாகக் கூட்டப்பட்ட மகா நாட்டிற்கு திரு. குருசாமியாரை வரவேற்புக்கமிட்டியார் தெரிந்தெடுத்ததற்கு நாம் அவர்களைப் பாராட்ட வேண்டும். ஏனெனில், நமது இயக்கத்தின் தத்துவங்களைப் பற்றி மிகத் தெளிவாக உணர்ந்தவர்களும் சிறிதும் சந்தேகம் இல்லாதவர்களுமாக உள்ளவர்களென்று நான் கருதிக்கொண்டிருக்கின்ற சிலர்களில் அதாவது நமது சங்கத்தலைவர் திரு. சௌந்திரபாண்டியனார், சொ. முருகப்பர், எஸ். குருசாமி ஆகிய முக்கியமானவர்களில் ஒருவராவார். ஆகவே, அப்படிப்பட்டவரும் அதோடுகூடவே, செய்கையிலும் ஒவ்வொரு துறையிலும் அக்கொள்கையையே பின்பற்றுகிறவருமாவார். நமது இயக்கத்துக்காக நடைபெறும் ஆங்கிலபத்திரிகையாகிய "ரிவோல்ட்" க்கு பெயாளவில் நான் பத்திராதிபனே ஒழிய காரியத்தில் அவரே தான் சகல நடவடிக்கைகளையும் நடத்துகிறவர். அவரது எழுத்துக்களும் கருத்துக்களும் தமிழ்நாடு மாத்திரமில்லாமல் வெளி மாகாணங்களிலெல்லாம் சுயமரியாதை மகாநாடு நடத்தும்படிசெய்துவிட்டது.

இந்த மாதத்திலேயே கேரள மாகாணத்தில் கோட்டயத்திலும், பம்பாய் மகாணத்தில் நாசிக்கிலும், பஞ்சாப் மகாணத்தில் லாகூரிலும் நடைபெறச் செய்திருக்கிறது. இந்தியா மாத்திரமில்லாமல் மேல் நாடுகளிலும், அமெரிக்கா, ஐரோப்பா முதலிய கண்டங்களிலிருந்து பாராட்டுக் கடிதங்களும் சந்தாதாரர்களும் வந்து கொண்டிருக்கின்றன. இதைத் தவிர, திரு. குருசாமிக்கு நல்லகல்வியும் அறிவும் இருப்பதின் நிமித்தம் அவருடைய வகுப்பில் பெரிய பிரபுக்களும் பதினாயிரக் கணக்கான பணத்துடன் பெண்கள் கொடுப்பதற்கு வலிய வந்தும் அவைகளையெல்லாம் லட்சியம் செய்யாமல் கலப்பு மணமே செய்து கொள்ளுவதென்றும், அதிலும் விதவையாயிருந்தவளே மேலென்றும் தீர்மானித்துக்கொண்டிருப்பவர். எனவே இப்பேர்ப்பட்ட, அதாவது, எண்ணத்தில், எழுத்தில், பேச்சில், செய்கையில் எல்லாவற்றிலும் ஒரே மாதிரியான கொள்கையுள்ள ஒரு பெரியார் நமக்குக்கிடைத்தது நமது இயக்கத்தின் முற்போக்கிற்கு ஒரு நல்ல அறிகுறியும் தொண்டர்களுக்கு வழிகாட்டியும் ஆகுமென்று சொல்லி ஆதரித்தார்,

பிறகு, பெருத்த கரகோஷத்தினிடையே திரு. S. குருசாமி அவர்கள் அக்கிராசனம் வகித்து தமது சொற்பொழிவை வாசித்தார். (சென்ற வாரம் வெளியாகியிருக்கிறது). வாசிக்கும்போது ஒவ்வொரு வாக்கியத்திற்கும் கூட்டத்திலிருந்த ஜனங்களுக்கு ஏற்பட்ட உற்சாகமும் கரகோஷமும் கேளுங்கள் கேளுங்கள் என்கிற சப்தமும் அடிக்கடி வாசிப்பதற்கு இடையூறு செய்துகொண்டே வந்தன. சுருக்கக்கூறினால் பெண்மணிகளுக்கும் வயது சென்றவர்களுக்கும் கூட அவ்வுபந்யாசமானது ஒருவித புத்துயிர் அளித்ததென்றே சொல்லலாம். உதாரணமாக, இரண்டொரு விதவைப்பெண்கள் தாம் மறுமணம் செய்துகொள்ளத் தயாராயிருப்பதாகச் சொல்ல மேடைக்குவர எழுந்ததும் அங்கிருந்த மற்றப் பெண்கள் அவர்களை அடக்கித் தடுத்ததுமே போதுமான அத்தாட்சியாகும்.

பிறகு, தலைவர் உபந்நியாசம் முடிந்ததும் திரு. கைவல்யசாமி அவர்களுடைய படத்திறப்புவிழாவுக்கு, திரு. சாமி. சிதம்பரனார் அவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி, திரு ப. சு. தண்டபாணி அவர்கள் கேட்டுக்கொள்ள, திரு. சிதம்பரனார் அவர்கள் அக்கிராசனம் வகித்து, திரு கைவல்ய சாமியின் ஆராய்ச்சியைப்பற்றியும் எழுத்துக்களைப்பற்றியும், உலக ஞான விளக்கத்தைப்பற்றியும் எடுத்துப்பேசி, திரு. K. V. அழகர்சாமி அவர்களைப் படத்தைத் திறந்துவைக்கும்படி கேட்டுக்கொண்டார். திரு. அழகர்சாமி அவர்கள் திரு. கைவல்யசாமியின் பெருமையையும் அவர் எழுதும் வியாசங்களின் பெருமையையும் எடுத்துச்சொல்லி, நாளது வரையில் ஒரு பண்டிதனாவது, ஒரு வித்துவானாவது, ஒரு ஆராய்ச்சிக்காரராவது, ஒரு சமயப் பெரியாராவது திரு. சாமியின் ஒரு கட்டுரைக்காவது பதில் சொல்லவே இல்லையென்றும் சாமியின் வியாசங்கள் வெளியானபிறகு ஆராய்ச்சிக்காரர்களுக்கும் பண்டிதர்களுக்கும் சமய வாதிகளுக்கும் அடியோடு யோக்கியதை போய்விட்டதென்றும் சாமியின் வியாசங்களேதான இவ்வளவு தொண்டர்களை உற்பத்தி செய்ததென்றும் சொன்னதோடு இயக்கத்தைப்பற்றியும் சில வார்த்தைகள் சொல்லி, படத்தைத் திறந்துவைத்தார்,

### உபசாரப் பத்திரங்கள்.

பிறகு திருவாளர் A. T. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில் திருவாளர்கள் P. T. ராஜன், W. P. A. சௌந்திரபாண்டியனார், ஈ. வெ. ராமசாமியார் ஆகியவர்களுக்கு உபசாரப் பத்திரங்கள் அதாவது திரு. ராஜன் அவர்களுக்கு தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தார் சார்பாகவும் திரு. W. P. A. சௌந்திரபாண்டியருக்கு சுயமரியாதைச் சங்கத்தார் சார்பாகவும், திரு. ஈ. வெ. ராமசாமியாருக்கு சுயமரியாதைத் தொண்டர்கள் வரவேற்புக் கமிட்டியார் சார்பாகவும் முறையே திருவாளர்கள் ப. சு. தண்டபாணி, சாமி சிதம்பரனார், திருஞானசம்பந்தம் ஆகியோர்களால் வாசித்துக்கொடுக்கப்பட்டு அப்பெரியார்களும் பத்திரத்திற்கு முறையே பதிலளித்தார்கள். பிறகு மாலை 7 மணிக்கு மகாநாடு கலைந்தது.

### விஷயாலோசனைக் கமிட்டி.

இரவு சாப்பாட்டுக்குப்பிறகு பட்டுக்கோட்டை ஜில்லா போர்டு சத்திரத்தில் தலைவர்கள் விடுதியில் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. தெரிந்தெடுக்கப்பட்ட சுமார் 100 அங்கத்தினர்கள் கூடியிருந்தார்கள். இரவு 2மணி வரையிலும் விவாதங்கள் நடைபெற்று 15 தீர்மானங்கள் வரை தீர்மானிக்கப்பட்டன.

### மறுநாள் மகாநாடு.

மறுநாள் காலை 8-30 மணிக்கு மகாநாடு துவக்கப்பட்டு 12-30 மணி வரையில் பகுதித் தீர்மானங்கள் நிறைவேற்றி, பகல் சாப்பாட்டுக்காக மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது.

(சாப்பாட்டுக்குப் பின் சுயமரியாதைச் சைவர் மகாநாடு நடைபெற்றது. விபரம் பின்னர் வரும்.)

### பிற்பகல் மகாநாடு

பிறகு, 4 மணிக்கு மகாநாடு துவங்கினதும் பாக்கியுள்ள தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்களின்மீது, திருவாளர்கள் A T பன்னீர்செல்வம், W. P. A. சௌந்தரபாண்டியர், வேணுகோபால்நாயுடு ஐ. குமாரசாமி பிள்ளை, மாவக்காடு வ. கே. ராமலிங்கத்தேவர் N. தண்டபாணி, கி. ஆ. பெ. விஸ்வநாதம், ராமச்சந்திரம், சோமசுந்தரம், ராமசாமி, ராமாமிருதத்தம்மாள், சிவானந்தம், நாகலூர் கல்யாணசுந்தரம், சுப்பையா, சிதம்பரனார், பொன்னம்பலனார், செல்வக்கணபதியார், அழகர்சாமி, திருஞானசம்பந்தம், சாமுவேல், காளியப்பன், செல்லப்பன், பகவதி, [illegible], ராமநாதன், சாமிநாதன், குஞ்சிதபாதம், S V லிங்கம், C. நடராஜன், சிதம்பரம் பிள்ளை, மூத்து நாடார் மாரிமுத்து ([illegible]), ராவணதாஸ், முதலிய பலர் பேசி பிரேரேபிக்கவும் ஆமோதிக்கவும் செய்தார்கள். தலைவர் முடிவுரையானதும் வரவேற்புத்தலைவர் திரு. தண்டபாணி அவர்களால் வந்தனம் சொல்லப்பட்டு, சென்னை தண்டபாணி அவர்களால் பிரதிநிதிகளுக்காக வந்தனம் சொல்லப்பட்டு தலைவர் முதலானோர்களுக்கு மாலைசூட்டி மகாநாடு இனிது நிறைவேறியது. நாகைத் தொழிலாளர் திருவாளர் ராஜு அவர்களும் திரு. ராவணதாஸ் அவர்களும், திரு. பொன்னம்பலனார் அவர்களும், திரு. குஞ்சிதபாதம் அவர்களும், இரண்டு நாளும் மகாநாடு கூடும்போதும் கலையும்போதும் சுயமரியாதைப் பாடல்களைப் பாடினது மிகவும் குறிப்பிடத்தக்கது.

### பொதுக்கூட்டம்.

பிறகு மகாநாடு முடிந்தவுடன் திருவாளர் சிவகங்கை வக்கீல் ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பிக்கப்பட்டு, காரைக்குடி, "குமரன்" பத்திராதிபர் திரு சொ. முருகப்பர் அவர்களால் "இந்து மதத்தின் ஆபாசமும், பார்ப்பனர் ஏற்படுத்திய புரட்டுகளும்" என்பதுபற்றி 2 மணி நேரம் ஆராய்ச்சித் திறனோடு வெகு அருமையான பிரசங்கம் செய்யப்பட்டது. 2மணி நேரமும் கொட்டகை முழுவதும் வெறும் சிரிப்பாகவே இருந்தது. பிரசங்கம் கேட்டுக்கொண்டிருந்தவர்களில் நாமத்தை யழித்தவர் பலரும், விபூதியை யழித்தவர்கள் பலரும், ருத்திராட்சத்தைப் பிடுங்கியெறிந்தவர்கள் பலரும், கூட்டத்தில் பிடுங்கி எறிய சங்கோஜப்பட்டு மறைத்துக்கொண்டவர்கள் பலரும், நாமக்காரர்களையும் விபூதிக்காரர்களையும் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தவர்கள் பலரும், விஷயங்களை வெகு வினயமாய்க் கவனித்து இதுவரையிலும் தாங்கள் மௌடீகத்தனமாயும், மூடத்தனமாயும் நடந்து வந்ததையும் மாற்றிக்கொண்டவர்கள் பலருமாய் இருந்த காட்சி அற்புதக் காட்சியாயிருந்தது.

### ஒரு விசேஷம்.

கலப்பு மணம், விதவை மணம் சம்பந்தமான தீர்மானம் வந்தபோது, தலைவர், அத்தீர்மானத்தை நடவடிக்கையில் நடத்தக்கூடியவர்களை எழுந்து நிற்கும்படி கேட்டபோது சுமார் 200வாலிபர்களும் 2, 3, பெண்களும் எழுந்து நின்றகாட்சி, எல்லாக் காட்சிகளை விட மேலான காட்சியாயிருந்தது. ஈரோடு கோயில் பிரவேச வழக்குக்கு பண உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டதும் உடனே கொஞ்ச ரூபாய் வசூலாயிற்று.

### இரவு பொதுக்கூட்டம்.

மகாநாடு கலைந்து, இரவு சாப்பாட்டுக்கு மேல், இரவு 10 மணிக்கு மகாநாட்டுப்பந்தலில் மறுபடியும் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. திருவாளர் பாண்டி வைத்தியநாததேவர் பேரப்பிள்ளையாகிய, திரு. வைத்தியநாதத்தேவர் அக்கிராசனம் வகித்தார். முதலாவதாக திரு. ஈ. வெ. ராமசாமியார் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லி, உடனே தஞ்சைக்குப் பிரயாணமாகிவிட்டார். பிறகு திருவாளர்கள் என். தண்டபாணி என். வி. கலியாணசுந்தரம்,

(இதன் தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க)

# சுயமரியாதைத் தொண்டர்கள் மகா நாடு

## நிறைவேறிய தீர்மானங்கள்

சென்ற மாதம் 25, 26, தேதிகளில் பட்டுக்கோட்டையில் நடைபெற்ற மாகாண சுயமரியாதைத் தொண்டர்கள்மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களின் விபரம் வருமாறு.—

### அநுதாபம்.

'உயர்திரு பானகல் அரசர் அவர்களுடையவும், எம். டி. சுப்பிரமணிய முதலியார் அவர்களுடையவும் அகால மரணத்திற்காக இம்மகாநாடு மிகவும் வருந்தித் தனது ஆழ்ந்த அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது.'

### சுயமரியாதைப் பிரசாரம்.

'செங்கற்பட்டில் கூடிய முதலாவது மாகாண சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்களை சுயமரியாதைத்தொண்டர்கள் கட்டுப்பாடாக நாடெங்கும் பிரசாரஞ்செய்து அவைகளைச் செயலில் கொண்டு வரும்படி செய்விக்க வேண்டும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

### இழிவான பதங்களை உபயோகித்தல்.

'நாம் எவ்வளவு தூரம் கண்டித்துச் சொல்லியும் சிறிதும் கவனிக்காமல் நம்மை சூத்திரர்கள் என்றும் நாலாவது வருணத்தார் என்றும், பஞ்சமர் என்றும் இழிவான பதங்களை இரு, மாளவியா முதல் வருணாச்சிரம மகாநாடு, "இந்து" "சுதேசமித்திரன்" முதலிய பத்திரிகைகள் வரை உபயோகித்து வருவதால் இனியும் அம்மாதிரி பதங்களை எந்தப்பார்ப்பனராவது, பார்ப்பனப் பத்திரிகைகளாவது உபயோகித்தால் நாமும் நிகண்டு அகராதிகளில் உள்ளபடி பார்ப்பனர்களுக்கு மிலேச்சர்கள் என்ற பதத்தை உபயோகிக்க நேரிடும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.'

'சூத்திரர் என்றாவது, பஞ்சமர் என்றாவது, நாலாவது வருணத்தார் என்றாவது உபயோகப்படுத்துகிற பத்திரிகைகளையும், வருணாசிரம தர்மத்தை யாதரித்து பிரசாரஞ் செய்கிற பத்திரிகைகளையும் பகிஷ்கரிக்க வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.'

'சூத்திரன் என்பது பெருமையான வார்த்தையென்றும், சற்சூத்திரன் என்பது மிகவும் பெருமையான வார்த்தையென்றும் பிரசாரஞ்செய்யும்படி பார்ப்பனர்கள் சில பார்ப்பனரல்லாதவர்களைப் பிடித்துக் கூலி கொடுத்தும், தங்களையே சூத்திரர் என்று ஒப்புக்கொள்ளும்படி செய்தும் பிரசாரஞ் செய்விக்கிறவர்களுடையவும் செய்கிறவர்களுடையவும் பேச்சைக் கேட்டு ஏமாறக் கூடாதென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.'

### மது விலக்கு.

'சுயமரியாதைத் தொண்டர்கள் தங்கள் சுயமரியாதைப் பிரசாரத்தில் மது விலக்குப் பிரசாரத்தையும் முக்கியமானதாகக் கொள்ளவேண்டும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.'

### ஜனாப் ஜமால் மகமதுக்கு ஆதரவு.

"இந்திய சட்ட சபைக்குச் சென்னை மாகாண வியாபாரத் தொகுதிக்கு உள்ள ஸ்தானத்திற்கு ஒரு வருணாச்சிரம தர்மப் பார்ப்பனர் நிற்பதால் அவருக்கு அந்த ஸ்தானம் கிடைப்பதன் மூலம் நமது முற்போக்கிற்கு இடையூறு உண்டாகுமாதலால் வர்த்தகர் நன்மையைக்கருதி தென்னிந்திய வர்த்தக இளவரசர் ஜனாப் ஜமால் மகமது அவர்களை ஆதரிக்குமாறு வர்த்தகத் தொகுதியார்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது."

### தொழிலாளர்களை ஜாமீனில் விட

"தென்னிந்திய தொழிலாளர் தலைவர்களைக் கைது செய்து ஜாமீனில் விட மறுத்ததும் உலகங்கள் அபிப்பிராயத்தை உத



இந்து தேவஸ்தான பரிபாலன போர்டு கமிஷனர் திரு- சூரியநாராயண முதலியார் அவர்களின் அருமை மகள் திரு ஆர். லட்சுமி தேவி பி- ஏ. அவர்கள் போலீஸ் டெபுடி கமிஷனர் ஜனாப் ஜமாலுதீன் சாஹிப் பி- ஏ- அவர்களை மணந்து கொண்டார்- இம்மணம் புதுச்சேரியில் பிரெஞ்சு சட்டப்படி நிறைவேறியது-

றித்தள்ளியும் மிக்க கொடுமையாக 15 பேர்களுக்கு 10 வருட கடுங்காவல் தண்டனை விதித்ததை இம் மகாநாடு அழுத்தமாக கண்டிப்பதுடன் அவர்கள் தற்சமயம் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்திருப்பதாகத் தெரிவதால் அவர்களை இப்பொழுதாவது வேண்டுமானால் கடுமையான நிபந்தனை ஜாமீனில் விடும்படி கவர்ன்மெண்டாரை இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது."

### உடற்பயிற்சி.

"நமது இயக்கத் தொண்டர்கள் சுயமரியாதைப் பிரசாரஞ் செய்யும்பொழுது ஆங்காங்கே உடற்பயிற்சிச்சாலைகளை அமைக்கச் செய்து ஒவ்வொரு இளைஞரையும் அச்சாலைகளில் உடற்பயிற்சி பழகும்படி செய்து உடம்பை நன்றாகப் பாதுகாப்பில் வைத்திருக்கப் பிரசாரஞ்செய்யவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது."

### சுயமரியாதைச் சங்கம்.

"செங்கற்பட்டு மகாநாட்டுத் தீர்மானப்படி சுயமரியாதைச் சங்கத்தைச் சீக்கிரம் ரிஜிஸ்டர் செய்து 'திராவிடன்', 'குடி அரசு', 'ரிவோல்ட்' முதலான பத்திரிகைகளை அதன் சார்பாக நிரந்தரமாய் நடத்தவேண்டிய ஏற்பாடு செய்யவேணுமாய் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.'

### உத்தியோகத்தில் சம உரிமை.

'சர்க்கார் உத்தியோகத்தில் சகலமானவர்கட்கும் சம உரிமையும் சம சந்தர்ப்பமும் இருக்கும்படி சுகாதார மந்திரி கனம் முத்தையா அவர்கள் முயற்சியால் ஏற்பட்ட அரசாங்க உத்தரவைப் பாராட்டுவதுடன் மற்ற எல்லா மந்திரிகளும் நிர்வாக சபை மெம்பர்களும் இதை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று இம் மகாநாடு கேட்டுக் கொள்ளுகின்றது."

(அ) மேற்படி உத்தரவு அமுலுக்கு வராமல் பல சூழ்ச்சிகள் செய்து மேற்படி உத்தரவிற்கு விரோதமாகப் பார்ப்பனரையே உத்தியோகத்திலமர்த்தும் கீழ்த்தர உத்தியோகஸ்தரிடமிருந்து அவர்கள் நியமிக்கும் உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தை வசூலிக்கும்படி கவர்ன்மெண்டார் ஓர் உத்திரவு பிறப்பிக்குமாறு அரசாங்கத்தை இம் மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(ஆ) மேற்படி அரசாங்க உத்தரவுப்படி கீழ்த்தர உத்தியோகஸ்தர்கள் செயலில் செய்கிறார்களாவென்பதைக் கவனித்து அரசாங்கத்திற்குத் தெரிவித்துத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வதற்காக ஒவ்வொரு தாலூகாவிலும் இதற்கென ஸ்தாபனங்கள் ஏற்படுத்துமாறு பார்ப்பனரல்லாத பொது ஜனங்களை இம்மகாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.'

### ஆலயப் பிரவேச வழக்கு.

ஈரோட்டில் நடந்த ஆலயப் பிரவேசத்தில் கைது செய்யப்பட்ட திருவாளர்கள் ஈஸ்வரன், பசுபதி, கருப்பன் ஆகியவர்களை இம்மகாநாடு பாராட்டுவதுடன் அவர்களுக்குப் பொருளுதவி செய்யவேண்டுமென்றும் பொது ஜனங்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

'ஈரோட்டில் நடைபெறும் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாகச் சுயமரியாதைப்போர் தொடங்கவேண்டிய அவசியமேற்பட்டால் சுயமரியாதைத் தொண்டர்கள் பூரண ஆதரவுடன் அதில் சேர்ந்து முன்னணியில் நின்று அப்போரை நடத்தித் தரவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.'

### விதவை மணம்.

நமது சுயமரியாதைத் தொண்டர்களும் வாலிபர்களும் தங்களுக்கு இல்வாழ்க்கைத்துணை அவசியமுள்ளபொழுது, அகப்படுமாயின் முதன்மையாக விதவைகளையே மணஞ் செய்து கொள்ளவேண்டியது என்று இம்மகாநாடுகேட்டுக்கொள்ளுகிறது.

தலைவர் குருசாமி.—சிலராவது இத்தீர்மானப்படி நடப்பவர்கள் எழுந்து நின்றால் தான் நான் ஒப்புக்கொள்வேன் என்றார்.

பல வாலிபர் எழுந்தனர், சில பெண்களும் ஓட்டு கொடுத்தனர்.

[இதன் தொடர்ச்சி 10ம் பக்கம் பார்க்க.]

## ஏஜண்டுகள் தேவை.

செங்கோட்டை கும்பகோணம் ஆகிய இரண்டு ஊர்களிலும் "குடி அரசு" "ரிவோல்ட்" பத்திரிகைகளுக்கு ஏஜண்டுகள் தேவை,

மானேஜர்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு சுக்கில ௵ வைகாசி ௴ 20௳.

இனிமேல்தான்

# மதத்தையும் சாஸ்திரத்தையும் திருத்தப் போகின்றார்களாம்.

நல்லதனமாகவும் நயமாகவும் கெஞ்சியும் கேட்பவர்களைப்பற்றி சாதாரண மனிதர்கள் சற்றும் லக்ஷியம் செய்வதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு நயமும் கெஞ்சுதலும் ஏற்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஆணவமும் பிடிவாதமும் மிரட்டுதலும் ஏற்படுவது நடுத்தர மனிதர்களிடம் காணும் சுபாவம். சாதாரண நடுத்தரமக்களின் குணமே இப்படி இருக்குமானால் மற்றபடி கீழ்த்தரமக்கள் அதாவது சமயசமூக வித்தியாசச்சேற்றில் உழன்றுகொண்டு அதன் மூலம் ஆதிக்கமும் வயிற்றுப்பிழைப்பும் ஏற்படுத்திக்கொண்ட இழி மக்களிடம் கெஞ்சுதலுக்கும் நல்லதனத்திற்கும் செவி சாய்ப்புக்கும் எதிர்பார்ப்பது எங்ஙனம் கூடும்?

உதாரணமாக சமயக் கட்டுப்பாட்டுக் கொடுமைகளும் சமூக கட்டுப்பாட்டுக் கொடுமைகளும் நம்நாட்டைப்பாழாக்கி அன்னியர்வசம் ஒப்புவித்து மானமிழந்து நிற்கச்செய்கின்றது என்பதை எல்லோரும் ஒப்புக்கொண்ட பிறகும் நடுமனத்துடன் அவைகளை ஒழித்தாலல்லது வாழமுடியாது என்பதை அறிந்தும் அவைகளையொழித்து விடுதலையையும் சமத்துவத்தையும் ஏற்படுத்தலுடன் மக்களின் வறுமையையும் எளிமையையும் ஒழிக்கவேண்டும் என்னும் எண்ணத்தோடு ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே பல பெரியோர்கள் முயற்சித்து வந்திருப்பது நாம் எல்லாரும் அறிந்ததாகும். அப்படி முயற்சித்த அவ்வளவுபேரும் "ஆண்டவன் அருள்பெற்றவர்களாகவும் "ஆண்டவனால் அனுப்பப்பட்டவர்க"ளாகவும் "முத்திநிலை மோக்ஷநிலை அடைந்தவர்க"ளாகவும் கருதப்பட்டும் வருகின்றார்கள் என்பதிலும் ஆக்ஷேபணை இல்லை.

ஆனாலும் அவர்களது அபிப்பிராயங்களுக்கும் வார்த்தைகளுக்கும் மாத்திரம் வெவ்வேறுவித பாஷ்யங்களும் வியாக்கியானங்களும் செய்யப்பட்டு காரியத்தில் கடுகளவுகூட அப்பெரியார்களது கருத்துக்கள் நிறைவேற முடியாமலும் செய்யப்பட்டு வந்திருக்கின்றன.

உதாரணமாக சங்கரர் என்னும் ஒரு பார்ப்பனர் பறையனால் ஞானோதயம்பெற்று அவன் காலில் விழுந்தார் என்றும், பறையன் என்பதாக ஒரு தனி பிறப்பு இல்லை என்று ஒத்துக்கொண்டார் என்றும் சொல்லப்படுவதை எல்லோரும் ஒப்புக்கொண்டதுடன் அவர் சிவன் அவதாரம் என்றும் ஒப்புக்கொண்டும் கடைசியாக சங்கரர் வேதாந்த தத்துவத்தை காட்டுவதற்காகப் பறையன் காலில் விழுந்தார் என்றும், விழப்பட்ட பறையன் ஜாதியில் பறையனல்லவென்றும் சிவனேதான் அந்தப்பறையன் வடிவமாகவும் வந்தார் என்றும் சொல்லி மறுபடியும் பழையபடியே பறையனைக் கண்டால் பாவம் என்றும் அதற்காக பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும் என்றும் சொல்லுகின்ற சாஸ்திரத்தை நிலைபெறச்செய்து அதன் கொள்கையை இன்றைக்கும் அமுலில் இருக்கவும் செய்துவிட்டது.

மற்றும், அதே சங்கரரின்பேரால் கடவுள் என்று ஒரு தனிவஸ்து இல்லை என்றும் ஒவ்வொரு மனிதனுள் இருக்கும் ஜீவனே-ஜீவ ஆத்மாவே கடவுள் என்றும் சொல்லிப்போனார் என்றும் சொல்லி அதற்காக அவரை லோககுரு வென்றும்—லோகமக்கள் எல்லோருக்குமே ஆச்சாரியார் என்றும் சொல்லப்பட்டு அதேமாதிரி மக்கள் மனதில் பதியவைத்தும் ஆய்விட்டது. ஆனால் எண்ணிக்கைக்கு அடங்காத தனித்தனி கடவுள்களுக்கு கோவில்கட்டி வணங்குகின்றவர்கள் இன்றைக்கும் சங்கராச்சாரி சிஷ்யர்களாகவேதான் பாவிக்கப்பட்டு வருகின்றார்கள்.

அதுபோலவே ராமனுஜர் என்னும் ஒரு பார்ப்பனர் மக்களில் ஜாதிபேதமில்லை என்றும், மந்திர ரகசியங்களை அறியக்கூடாத மனிதர்கள் இல்லை என்றும், எல்லோரும் அதாவது எவனொருவன் நாமம் தைத்து பூணூல்போட்டுக் கொள்கின்றானோ அவனெல்லாம் வைணவனாவான் என்றும் சொன்னதுடன் அதற்குப்படியே கோடிக்கணக்கான மக்களை வைணவர்களாக்கினார் என்றும், பார்ப்பனனல்லாதவன் சாப்பிட்ட எச்சில் இலையை எடுத்ததற்கு ஒரு பெண்ஜாதியின் மீது கோபங்கொண்டு வெளிக்கிளப்பினார் என்றும் இன்றைய வைணவமதம் ராமனுஜருடைய மதம் என்பவர்களெல்லாம் ராமனுஜருடைய சிஷ்யர் என்று சொல்லிக்கொண்டு அவரையும் கடவுளாக்கி அவருக்கும் கோவில் முதலியவைகள் கட்டி பூஜை உற்சவம் முதலியவைகள் செய்துகொண்டும் பட்டைநாமங்கள் போட்டுக்கொண்டும் அவரைப்பற்றிப் படித்துக்கொண்டும் இருக்கும் மக்கள் இன்றைய தினம் சம்பந்திவீட்டில் சாப்பிடாமலும் ஒருவர்க்கொருவர் திரைபோட்டுக்கொண்டு சாப்பிடுவதையும் பார்க்கின்றோம்.

அதுபோலவே திருவள்ளுவர் என்று சொல்லப்பட்டவர், குலத்தில் பறையரென்றும், அவர்பாடிய குறள் என்னும் நூல் ஐந்தாம்வேதம் என்றும், தெய்வப் புலவர் என்றும், பிரம்மாவின் அவதாரமென்றும், அப்பேர்ப்பட்டவரால்செய்யப்பட்ட குறளை ஒப்புக்கொள்ளாத மனிதன் அறிவுடையவனாக மாட்டான் என்றும், மற்றும் சங்கரர் ராமனுஜர் பார்ப்பனரென்றும் வள்ளுவர் பார்ப்பனரல்லாதார் என்றும் ஆகையால் அதுதான் தமிழ்மக்களுக்கு நீதி என்றும் சொல்லும் மக்கள் தங்களைக் குறளில் வல்லவர் புலவர் என்று சொல்லிக்கொள்ள விரும்புவதோடு வள்ளுவருக்குகோவில் கட்டிபூஜிப்பதல்லாமல் வள்ளுவர் குறளில் சொன்னபடி நடப்பவர்கள்யாரும் இல்லை. அன்றியும் "குறளானது வள்ளுவர் போன்ற ஞானிகளுக்கு உகந்ததேஒழிய நமக்கல்ல" என்று சமாதானமும் சொல்லிவிடுகிறார்கள்.

அது போலவே சைவர்கள் என்னும் ஒரு கூட்டமும் தங்கள் மதத்திற்கு என்று ஆதியோ ஆச்சாரியரோ ஒருதமிழ் ஆகிறாலோ ஒன்றும இல்லையாயினும் பார்ப்பனர்களால் தாங்கள் இழிவு படுத்தப்பட்டிருக்கும் காரணத்தால் எப்படியாவது தங்களைப் பார்ப்பனரை விட்டுப் பிரித்துக் காட்ட எண்ணி அப்பார்ப்பனர்களிடமிருந்தே சிலவற்றை பொறுக்கிக் கொண்டு அதையே ஆதாரமாகவும் வைத்துக் கொண்டு தாங்களுக்கு ஒரு தனி மதம் உண்டென்றும், அது தான் சைவம் என்றும் அதற்கு சிவனே கடவுள் என்றும், சிவன் என்றால் அன்பு என்னும் குணம் என்றும், எல்லோரும் சிவசொரூபமென்றும் சொல்லி பிறகு, பார்வதி, பரமசிவன், கைலாயம், ரிஷபவாகனம், லிங்கம், ஆவுடையார் என அர்த்தமற்றதும் கேவலமானதும் பொருந்தாததுமான கண்டவற்றையெல்லாம் சொல்லிக்கொண்டு உலகத்தில் அது ஒரு பிரமாதமான விஷயம்போல் கருதி மக்களை மக்கள் பார்க்கமுடியாமலும் ஒன்றுசேர்க்க முடியாமலும் பிரித்துவைத்துக்கொண்டிருக்கத்தக்க வண்ணத்தில் பேதங்களையும் நிர்ப்பந்தங்களையும் வைத்துக்கொண்டு இருப்பதையும பார்க்கின்றோம்.

இம்மாதிரி இன்னும் எத்தனையோ விஷயங்களை அறிவிற்கும் எண்ணத்திற்கும் வார்த்தைக்கும், செய்கைக்கும், அனுபவத்திற்கும் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத பல விஷயங்களும் ஆதாரங்களும் மனித சமூகத்திற்கும், முன்னேற்றத்திற்கும் தடைகல்லாய் இருப்பதை யாரும மறுத்துவிட முடியாது. இவைகளைப்பற்றி யாராவது எடுத்துச்சொல்லி அதன் அக்கிரமங்களை நீக்கவேண்டுமென்று நயமாகவும் கெஞ்சியும் கேட்டபோதெல்லாம் அவைகளால் பிழைத்து வருபவர்கள் "மதம் இடம் கொ

டுக்கவில்லை" "சமயம் இடங்கொடுக்கவில்லை" "கடவுளுக்கு விரோதம்" "பெரியார்களுக்கு விரோதம்" "வேதத்திற்கு விரோதம்" "சாஸ்திரத்திற்கு விரோதம்" "ஆகமத்திற்கு விரோதம்" என்று சொல்லி அவர்களை எதிர்த்து வாயெடுக்க வொட்டாமல் அடக்கிக்கொண்டே வந்து விட்டார்கள். இப்பொழுது அப்பேர்ப்பட்ட மதம், சமயம், கடவுள், பெரியார் வேதம், சாஸ்திரம், ஆகமம் முதலிய எல்லாவற்றையும் ஒருகை பார்த்து விடுவதென்று தீர்மானித்து அவைகளின் ஆபாசங்களையும் அயோக்கியத்தனங்களையும் வெளியாக்கி அடியோடு ஒழிக்கத்துணிந்த பின்பு தங்களால் கூடியவரை என்னமோ சூழ்ச்சிகள் செய்து எதிர்த்துப் பார்த்தும் முடியாது போகவே இனி தங்கள் பாடு ஆபத்து என்று உணர்ந்து ஒருவாறு வழிக்கு வந்திருக்கின்றார்கள். அதாவது இவ்வாரத்தில் பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த பூனாவில் உள்ள வருணாசிரமப் பார்ப்பனர்களும் அதிகாரப் பார்ப்பனர்களும் அரசியல் பார்ப்பனர்களும் எல்லாரும் ஒன்றுசேர்ந்து இந்துமத சாஸ்திர ஆராய்ச்சியும், திருத்தமும் என்பதாக ஒரு மகாநாடு கூட்டிப்பேசி இருக்கின்றார்கள். அதில் வரவேற்புத் தலைவர் திரு. கேல்கர் தமது சொற்பொழிவில் "காலத்திற்குத் தக்கபடி சாஸ்திரங்களை திருத்திக்கொள்ளவேண்டும், ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் எழுதப்பட்ட தர்ம சாஸ்திரம் எக்காலத்திற்கும் பொருத்தமானதென்று கருதுவது சரியல்ல" என்று சொல்லி ஆராய்ச்சியும் திருத்தமும் அவசியமென்று பேசினார். மகாநாட்டுத் தலைவரான மற்றொரு ஹைக்கோர்ட்டு ஜட்ஜி பார்ப்பனர் "சாஸ்திரங்களை திருத்தி ஆகவேண்டிய காலம் வந்து விட்ட"தென்றும் "திருத்தங்களுக்கு ஒப்புக்கொள்ளாதவர்கள் சாஸ்திரங்களை அறியாதவர்கள்" என்றும் சொல்லி இருக்கின்றார்.

தவிர இந்த விஷயங்களை ஆதரித்து 28-5-29ல் 'சுதேசமித்திர'னிலும் "தர்ம சாஸ்திர ஆராய்ச்சியும் திருத்தமும்" என்று ஒரு தலையங்கமும் எழுதப்பட்டிருக்கின்றது. இது ஒரு சமயம் உண்மையான எண்ணத்தோடு பேசப்பட்டும் எழுதப்பட்டும் இருந்தாலும் சரி அல்லது தற்சமயம் பொது ஜனங்களுக்கு தோன்றியிருக்கும் உணர்ச்சியின் வேகத்தைத் தணிக்கக்கருதி சூழ்ச்சி எண்ணத்துடன் எழுதியிருந்தாலும் சரி எப்படியாவது சாஸ்திரங்கள் எல்லாக்காலத்திற்கும் ஆதாரமல்ல என்பதையும் காலத்திற்குத் தக்கபடி புதுப்பித்துக்கொள்ளலாம் என்பதையும் பார்ப்பனர்கள் ஒப்புக்கொள்ள வேண்டிய நிலைமைக்கு வந்தது நமக்கு ஒரு வெற்றி என்றே சொல்லவேண்டும்.

இந்த சாஸ்திரத்தை தங்கள் சொந்த சொத்தாகக்கொண்ட பார்ப்பனர்களே இந்த மாதிரி வேதசாஸ்திரங்களையே புதுப்பித்தாகவேண்டுமென்று ஒப்புக்கொண்ட பிறகு அதிலிருந்து திருடிக்கொண்டும் பிச்சை வாங்கிக்கொண்டும் அவர்களிடம் கூலி பெற்றுப் பிரசாரம் செய்துகொண்டும் இருக்கின்ற குப்பைப் புராணச் சமயவாதிகளும் புராணக் கடவுள்களை ஸ்தாபிக்கும் ஆஸ்திக பிரசாரவாதிகளும் இனி என்ன செய்யப் போகின்றார்கள் என்பது நமக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் அவர்களும் பார்ப்பனர்களை பின்பற்றி தங்கள் புராணங்களையும் சமயங்களையும் கடவுள்களையும் புதுப்பிக்க வேண்டும் என்பார்களோ அல்லது ஒரு எழுத்துக்கூட மாற்றக்கூடாது ஒரு கடவுளைக் கூட தள்ளக்கூடாது எல்லாம் உண்மை எல்லாம் சத்தியம் என்று தத்துவார்த்தம் சொல்லிக்கொண்டே திரிவார்களோ தெரியவில்லை.

எப்படியானாலும் சட்ட சபைத் தேர்தல் ஒரு வருஷம் ஒத்தி போட்டு விட்டதாலும் அதன் காரணமாய் "ஆஸ்திக ஸ்தாபன அவதாரமான" திரு. சீனிவாசய்யங்கார் ஒய்வெடுத்துக் கொள்ளுவதாய்ச் சொல்லி விட்டபடியாலும் அநேகமாக சமய மகாநாடுகளும் ஆஸ்திக பிரசார மிஷினும் சற்று ஓய்வு எடுத்துக்கொள்ள நேரிடும் என்றே கருதுகின்றோம்.

ஏனெனில் இனி ஒன்றரை வருஷம் பொறுத்து வரப்போகும் தேர்தலுக்கு ஆக இப்பொழுதிருந்தே சமயப்பிரசாரமும் ஆஸ்திகப் பிரசாரமும் செய்வதென்றால் பணம் கொடுப்பவர்களுக்குத்தான் அந்தக் கஷ்டம் தெரியுமே ஒழிய சும்மா நின்று கத்திவிட்டு கூலிவாங்குகிறவர்களுக்கு தெரிய முடியவே முடியாது. ஆதலால் நமக்கும் சற்று நா[illegible]வே ஒய்வு கிடைத்துவிடும் போலவே தெரிகின்றது. ஏனெனில் நமக்கு எதிரிகள் என்று ஒன்றுபேர் தோன்றி அவர்கள் ஏதாவது நமது இயக்கத்தைப்பற்றி சொல்லிக்கொண்டிருந்தால் தான் நாமும் அதற்கு பதில் சொல்லும் முறையில் நமது பிரசாரமும் மேலும் மேலும் வளருவதற்கு அனுகூலமாக இருக்குமே ஒழிய எதிர்ப்பு இல்லாதபோது உணர்ச்சியும் வேகமும் இருக்கவே முடியாது.

உதாரணமாக திரு. கல்யாணசுந்தர முதலியார் கடவுள்போச்சுது கலைகள்போச்சுது கடவுளைக் கண்ட பெரியார்கள் போச்சுது அவைகளைக்காப்பாற்ற அவதாரம் வேண்டும் அறப்போர் செய்ய வேண்டும் என்று கூப்பாடு போடாமலிருந்தால் கடவுள்கள் யோக்கியதையும் பெரிய புராணம் முதலிய கலைகள் யோக்கியதையும் அதில் உள்ள கடவுள்களைக்கண்ட பெரியார்கள் யோக்கியதையும் இவ்வளவு தூரம் மக்களுக்கு வெளியாக்கப்பட்டிருக்க முடியவே முடியாது என்று துணிந்து கூறுவோம். அன்றியும் அனேக பெரியார்கள் யோக்கியதையும் வெளியாயிருக்காதென்று கூட சொல்லுவோம்.

## "குடி அரசு" வாசகர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

இந்த இரண்டு மூன்று வாரமாய் தெரிவித்துவந்தபடி நமது பத்திரிகாலயத்தை சென்னையில் நிறுவவேண்டிய ஏற்பாடு செய்துவருகின்றோம். இதனால் ஒரு வாரம் அல்லது இரண்டு வாரம் நமது பத்திரிகை தடைப்படலாம். பிறகு சென்னையிலிருந்து மேல்காகிதத்துடனும் 20 பக்கங்களுடனும் வெளி வரும்.

குறிப்பு.—"குடி அரசு" ஆரம்பித்த இந்த ஐந்து வருஷ காலத்தில், இரண்டாவது வருஷ முதலில் ஒரு தடவை ஒரே வாரமும், இப்போது ஒரு தடவையும் தான் அதுவும் அசௌகரியம் காரணமாகவேதான் தவக்கப்பட்டிருப்பதால் வாசகர்கள் அவசியம் பொறுத்துக்கொள்வார்கள் என்று நினைக்கின்றோம். (ப-ர்.)

## வரதராஜுலுவின் விஷமப்பிரசாரம்.

"தமிழ்நாடு" பத்திரிகையில் திரு. வரதராஜுலு அவர்கள் ஈரோடு தேவஸ்தானக்கமிட்டியார் செய்திருந்த ஆலயப்பிரவேசத் தீர்மானத்தை திருப்பூரில் கூடிய தேவஸ்தானக்கமிட்டி மீட்டிங்கில் கேன்சில் செய்து விட்டதாகவும், அதற்கு ஈ. வெ. ராமசாமியும் சம்மதித்ததாகவும் இதனால் ராமசாமி குட்டிக்கரணம் போட்டு விட்டதாகவும் பொருள்பட அயோக்கியத்தனமாகவும் விஷமத்தனமாகவும் ஒரு செய்தியும்போட்டு அதற்காக உபதலையங்கமும் எழுதியிருக்கிறார். திருப்பூர் மீட்டிங்கில் அந்தத்தீர்மானம் ரத்து செய்யப்பட்டதாய் எழுதி இருப்பது பொய்என்றும் முதலாவது அம்மாதிரி ஒரு தீர்மானமே அன்றைய மீட்டிங்குக்கு வரவில்லை என்றும் நாம உறுதி கூறுவதுடன் மேலும் அந்த மீட்டிங்குக்கு திரு. ஈ. வெ. ராமசாமி போகவில்லை என்றும் அவர் அன்று பட்டுக்கோட்டை சுயமரியாதை தொண்டர் மகாநாட்டு விஷயமான வேலையில் ஈடுபட்டு இருந்தார் என்றும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். எனவே இதனால் "தமிழ்நாடு" பத்திரிகையின் யோக்கியதையையும் அது இதுவரை நடந்து வந்த மாதிரியையும் கோவில் பிரவேச விஷயத்தில் அதற்குள்ள பொறாமையையும் இழி குணத்தையும் பொது ஜனங்கள் அறிந்து கொள்ள ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டதன் மூலம் நமக்கு மகிழ்ச்சி ஏற்பட்டதைத் தவிர வேறு எவ்வித கஷ்டமும் உண்டாகி விடவில்லை என்றும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தவிர அம்மாதிரி ஏதாவது ஒரு சமயம் தேவஸ்தானக்கமிட்டியார் அத்தீர்மானத்தை ரத்து செய்வார்களானால் கண்டிப்பாய் திரு. ஈ. வெ. ராமசாமியார் கமிட்டி வைஸ் பிரசிடெண்டு ஸ்தானத்தையும் மெம்பர் ஸ்தானத்தையும் ராஜீநாமா கொடுத்து விட்டு அத்தீர்மானத்தின் தத்துவத்தை சட்டத்தின் மூலமோ சுயமரியாதை சத்தியாக்கிரகத்

தின் மூலமோ அமுலில் கொண்டு வரும் வேலையில் இறங்குவாரே ஒழிய 'உடம்புக்கு சவுகரியமில்லை' என்று சாக்கு சொல்லிக் கொண்டு முதுகு காட்டி ஓடி விடமாட்டார் என்பதை திரு. வரதராஜுலுவுக்கு வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## ஒத்திபோடுதல்.

இந்திய சட்டசபை மாகாண சட்டசபை ஆகியவைகளின் காலாவதி ஒரு வருஷ காலம் ஒத்திபோடப்பட்டாய் விட்டதால் திரு. சீனிவாசய்யங்கார் பிரசாரமும் அவர் ஓய்வெடுத்துக் கொள்வதன் மூலம் ஒத்திபோட்டாய்விட்டது. ஜஸ்டிஸ் கட்சியாரும் தங்களது நெல்லூர் மாகாண மகாநாட்டை ஒத்திபோட்டு விட்டார்கள். அது போலவே திரு. கல்யாணசுந்தர முதலியாரது ஆஸ்திகப் பிரசாரமும், சைவப் பெரியார்கள் மகாநாடுகளும் அநேகமாக ஒத்திபோடப்பட்டுவிடும். திரு வரதராஜுலுவின் உத்தியோக மேற்கும் பிரசாரமும் அவருக்கு அடிக்கடி காயலா வருவதன் மூலம் ஒத்திபோடப்பட்டாய்விட்டது. இது மாத்திரமல்லாமல் திரு. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரின் மது விலக்கு பிரசாரமும், திரு. ஜம்னுலால் பஜாஜின் தீண்டாமைப் பிரசாரமும் திரு. சங்கர்லால் பாங்கரின் அன்னியத்துணி பகிஷ்காரமும் கண்டிப்பாய் ஒத்தி போடப்படலாம். அன்றியும் "தேசமே பிரதான" மென்கின்ற உத்தியோகப்பிரதான கட்சியாரின் தேசாபிமானப் பிரசாரமும் கண்டிப்பாய் ஒத்திபோடப்பட்டு விடும்.

இவற்றையெல்லாம் விட 1929ம் வருஷம் டிசம்பர் மாதம் 31 ம் தேதி இரவு 12 மணி 5 நிமிஷத்திற்குள் தேசு இட்டப்படி குடியேற்ற நாட்டு அந்தஸ்து கொடுக்கப்படாவிட்டால் கண்டிப்பாய் ஒத்துழையாமை நடத்துவது என்கின்ற திரு. காந்தியின் வாய்தாவும் கண்டிப்பாய் யார் தடுத்தாலும் நிற்காமல் ஒத்திபோட்டாய்விடும்.

## சைவப் பெரியார் மகாநாடு

திருநெல்வேலியிலும், திருப்பாப்புலியூரிலும் சமீபத்தில் கூட்டப்பட்ட சைவப்பெரியார்கள் மகாநாடு என்பதற்கு திருவாளர்கள். அண்ணாமலை பிள்ளை, சாமிநாத செட்டியார், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் கிருஷ்ணசாமி பாவலர் முதலியவர்களுக்கு மகாநாட்டில் கலந்து கொள்ளவும் மகாநாட்டு மேடைமேல் ஏறி அவர்கள் யோக்கியதைக்குத் தகுந்தபடி பேசவும் மகாநாட்டின் தீர்மானங்களுக்கு ஓட்டு கொடுக்கவும் தாராளமாய் இடமளித்த திருவாளர்கள். வ. உ. சிதம்பரம்பிள்ளை, டி. பா. திரிகூடசுந்தரம் பிள்ளை, பூவாளூர் செல்வக்கணபதியார் ஆகியவர்களுக்கும் மற்றும் சில சைவ சமாஜப் பிரதிநிதிகளுக்கும் இடமளித்த சமூகத்திலிருந்தும், சைவப்பெரியார்கள் என்பவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதையும் அம்மகாநாடு எந்த பிரசாரத்திற்காக கூட்டப்பட்டதென்பதையும் அதைப்பற்றி நாம் முன் எழுதி வந்தவைகள் எல்லாம் உண்மையா அல்லவா? என்பதையும் பொது ஜனங்கள் அறிந்துகொள்ள அம்மகாநாடானது ஒரு அளவுகருவியாக பயன் பட்டமைக்கு நாம் மகிழ்ச்சியுடன் மகாநாட்டைக் கூட்டிய பிரமுகர்களுக்கும் நன்றி செலுத்துகின்றோம்.

(7ம் பக்கத் தொடர்ச்சி.)

மாளவியாவுக்குக் கண்டனம்.

"தேசத்திற்கு அருக சீர்திருத்தஞ் செய்வதாகச் சொல்லிக் கொண்டுவந்த திரு. பண்டித மாளவியா அவர்கள் சாதிப்பிரிவுகளையும் வருணாசிரம தர்மத்தையும் நிலை நிறுத்தவும், அவற்றை ஆதரிக்கும் வேத சாஸ்திர புராண இதிகாசங்களைப் பரப்பியும் பிரசாரஞ் செய்தும் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைத் திரித்துக் கூறியும் விஷமப் பிரசாரஞ் செய்வதால் அவரது பிரசாரத்தை இம்மகாநாடு பலமாகக்கண்டித்து வெறுக்கிறது."

எச்சரிக்கை.

"கடவுள் பூசைக்கும் உற்சவத்திற்கும் பணம் செலவழிக்கக்கூடாதென்றும், கடவுளை வணங்க தரகர்கள் வேண்டாமென்றும், செங்கற்பட்டில் செய்யப்பட்ட தீர்மானத்தைப் பார்ப்பனர்கள் தேர்தலுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளக் கருதி சில கூலிகளைப் பிடித்துத் திரித்துக்கூறிப் பாமர மக்களை ஏமாற்றி ஓட்டு வாங்கச் சூழ்ச்சி செய்வதால் பார்ப்பனர்களும் அவர்கள் கூலிகளும் செய்யும் தேர்தல் பிரசாரத்தைக் கண்டு யாரும் ஏமாந்து போகக்கூடாதென்று பொதுஜனங்களை இம்மகாநாடு எச்சரிக்கை செய்கின்றது."

பின்பு தொண்டர்களின் அமைப்பு திட்டத்தைப்பற்றியும் பிரசாரத்திற்குப் பொருள் வசூலிப்பதைப்பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

எல்லாத் தீர்மானங்களும் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

சுயமரியாதை பெற்றால்

சுயராஜ்யம் பெறலாம்.

## நோட்டீஸ்.

### ஈரோடு டி. மு. கோர்ட்டு

S. C. No. 2176 of 28.

வாதி— சி. மு. பொன்னப்ப முதலியார்,

பிரதிவாதிகள்— தம்பிக்கவுண்டன் மகன் கந்தசாமிகவுண்டன் 1, குப்பாக்கவுண்டன் மகன் நாச்சிமுத்துக்கவுண்டன் 2, காளி போயன் மகன் காத்தாபோயன் 3.

ஷை கேசில் வாதி, ஷை பிரதிவாதிகளின் பேரில் ரூ. 189-14-6 தகைக்கு, ஷை யார்கள் 1-12-25 தேதியில் எழுதிக்கொடுத்திருக்கும் பிராமிசரி நோட்டுப்படிக் கிடைக்கவேண்

### ஈரோடு டி. மு. கோர்ட்டு.

1928-ஞு அசல் நெம்பர் 7.

1928-ஞு I. A. No. 472

திருச்சிராப்பள்ளி ஜில்லா குளித்தலை தாலூக்கா திருக்காம்புலியூர் கிராமம் மஜரா காட்டூரிலிருக்கும் கந்தசாமி செட்டியார் மகன் K. அமிர்தலிங்கஞ் செட்டியார்—

வாதி.

சேலம் ஜில்லா ஓமலூர் தாலூக்கா தின்னப்பட்டியைச் சேர்ந்த பன்னைப்பட்டியிலிருக்கும் கந்தசாமி செட்டியார் 1— (இறந்தார்.)

ஷையார் மக்கள் முத்துச்சாமி செட்டியார் 2, கவர் நாகூர் செட்டியார் 3.

by கார்டியன் ஈரோடு டி. மு. கோர்ட்டு ஹெட்கிளார்க்கு.

ஷை நெம்பரில் மைனர் 3-ம் பிரதிவாதிக்கு ஈரோடு டி. மு. கோர்ட்டு ஹெட்கிளார்க்கு அவர்களை வன் கார்டியனாக நியமிக்கக்கூடாதென்பதற்கு, இந்த நெம்பர் 2-ம் பிரதிவாதி முத்துச்சாமி செட்டியாரும், ஷை மைனரின் தாய்மாமன் குப்புசாமி செட்டியாரும், 12-6-29ந் தேதியில் இக்கோர்ட்டில் ஆஜராகி தகுந்த காரணம் காட்டாதவரை ஷை கோர்ட்டு ஹெட் குமாஸ்தா அவர்களையே கார்டியனாக நியமிக்கப்படும் என்கின்ற விபரம் இதன்மூலம் தெரிவிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| ஈரோடு. 31-5 29. | கே. சுந்தரம் அய்யர், வாதி வக்கீல். |

### ஈரோடு டி. மு. கோர்ட்டு.

1929-ஞு S. C. No. 317.

வாதி.

கஸ்பா ஈரோட்டிலிருக்கும் A. செங்கோடம் பிள்ளை குமாரர் E. S. துரைசாமிபிள்ளை

பிரதிவாதி.

கஸ்பா ஈரோட்டிலிருந்து இப்போது ஈரோடு தாலூக்கா வடமுகம் வெள்ளோடு கிராமம் செம்பமங்கோவிலில் இருக்கும் A. தங்கமுத்துப் பிள்ளை குமாரர் T. சங்கரலிங்கம் பிள்ளை

ஷை நெம்பரில் வாதி பிரதிவாதி பேரில் பிராமிசரிப்படி ரூபாய் 257-4-9க்கு தாவா செய்து ஷை நெம்பர் 4-6-1929ந் தேதிக்கு வாய்தா போட்டிருப்பதால், பிரதிவாதி ஷை தேதியில் ஆஜராகாவிட்டால் ஷை நெம்பர் ஒரு தலைப்பட்சமாகத் தீர்ப்புச் செய்யப்படும்.

| | |
|---|---|
| ஈரோடு, 31-5-29 | கே. சுந்தரம் அய்யர், வாதிவக்கீல். |

டுமாய் ஷை கோர்ட்டில்தாவாசெய்து ஷை கேஸ் 13-6-29 வாய்தாபோட்டிருக்கும் சங்கதி ஷை பிரதிவாதிகளுக்குத்தெரிவிக்கப்படுகிறது.

S. ராஜா, B. A. B. L.

வக்கீல ஈரோடு.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ராமாமிர்தம்மாள், ராவணதாஸ், காளியப்பன், சாமுவேல் பிள்ளை, ராமய்யா நயினர், முதலியவர்கள் விடியற்காலம் 4 மணி வரையிலும் பேசினார்கள்,

அடுத்த மகாநாடு ராமநாதபுரம் ஜில்லாவில் கூடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

### கொடியேற்று விழா.

கொடியேற்று விழாவாற்றிய திருச்சி திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் வருமாறு:—

ஒரு கொடியை உயர்த்துவதன் நோக்கம் ஒரு நாட்டு மக்களுக்கு உணர்ச்சியை உண்டாக்குவதேயாகும். அதன்படி நமது சுயமரியாதை இயக்கத் தொண்டர் குழாத்தினர் கொடியை இன்று உயர்த்துவதினால் நம் நாட்டு மக்களுக்குச் சுயமரியாதை உணர்ச்சி வீறு கொண்டெழுமென்றே நம்புகிறேன். இக்கொடி பறப்பதன் மூலம் உண்டாகின்ற காற்றின் அலைகளுக்கே ஓர் வித வன்மை உண்டாகும். அவ்வன்மை இந்தியாவின் மூலை முடுக்குகளிலுள்ள ஒவ்வொரு இளைஞரின் ரத்தத்திலும் ஓர் வித புதிய உணர்ச்சியை உண்டாக்குமென்றே நம்புறேன்.

இன்று உயர்த்தப்பெறும் இச்சுயமரியாதைக் கொடியானது சில சொற்களைக்கூறுகின்றது. அச்சொற்களாவன:- சமத்துவம் நிலவுக! வேற்றுமை ஒழிக! அறம் சிறக்க! மறம் அழிக! சூழ்ச்சிகள் சிதறுக! உண்மைகள் விளங்குக! மூடக் கொள்கைகள் அழிந்தொழிக! பகுத்தறிவு விளங்குக! உண்மையான தொண்டர்களே! நாட்டிற்கு நற்பணியாற்றி நலம் பெற்று வாழுங்கள்! சுயமரியாதையே உங்கள் பிறப்புரிமை! என்பவைகளேயாம் என்று கூறிக் கொடியை ஏற்றினார்.

### வரவேற்புச் சொற்பொழிவு.

திரு. ப. சு. தண்டபாணியின் வரவேற்புச்சொற்பொழிவின் சாரமாவது:—

### நமது இயக்கம்

சுயமரியாதை என்பதின் முக்கிய முடிவு தன் மதிப்பைக்காப்பாற்றிக்கொள்வது என்பதைத்தவிர வேறெதுவுமாக இருக்கமுடியாதென்பதை எவரும் மறுக்க முடியாதென்றே நினைக்கின்றேன். தன் மதிப்புக்கு இடையூறாக உள்ள எதையும் நாம் களைந்தெறிய வேண்டும்.

தற்காலம் நாம் எதையோசித்தாலும் எதைச் செய்தாலும் அவை அனைத்திலும் சுயமரியாதை உணர்ச்சிக்கு பங்கம் இருந்து கொண்டேயிருக்கிறது. அத்தகைய முறையில் நமது வாழ்க்கையின் ரீதி என்றும் மாறாதபடி நிர்ணயிக்கப்பட்டுவிட்டதாகக் கருதி நாம் அஞ்சுவதே அதற்குக்காரணமாகும், அச்சமுளவிடத்தே அடிமைப்புத்தி உதயமாகிவிடுகின்றது. அந்த, தானே அடிமை வாழ்க்கை என்றும் மாறாதவகையில் நிலைத்துவிடுவதில் என்ன ஆச்சரியமிருக்கிறது?

சுருக்கக் கூறுமிடத்துஎல்லாத்துறைகளிலும் அதாவது அரசியல் சமூகவியல், மதவியல் பொருளியல் போன்ற பல துறைகளிலும் மனிதக்கூட்டத்திற்கு சுயமரியாதைக் குறைவு ஏற்பட்டிருப்பது கண்கூடு. அவை யாவற்றையும் நிவர்த்திக்கப்படுபடவேண்டியதுதான்சுயமரியாதைத் தொண்டர்களாகிய நமது தவறக்கூடாத கடமையாகும். இவ்வழியில் நாம் செய்யவேண்டிய வேலைகளுக்குப்பழையநிலைமைகளும் அதற்கு ஏற்பட்டு நிலைத்திருக்கும் பலமான ஆதிக்கமும் பலவகையிலும் நமக்கு சங்கடத்தையே விளைவிக்கும். எனினும் இன்னல்களைக் கடந்து செல்ல நாம்தைரிய முள்ளவர்களாகவிருக்கவேண்டும். நமதியக்கக் கொள்கைகளை நாம் இன்னும்பலமாய்ப் பிரசாரம்செய்துநம்மவர்கள் யாவரும் சுயமரியாதைத் தத்துவங்களைச் சரிவர உணர்ந்து அதன்படி நடக்க வழி செய்ய வேண்டும். நமது சுயமரியாதை இயக்கம் தோன்றிச் சொற்பகாலமேயாயிற்று. என்றாலும் இதற்கு முன்னும் இத்தகைய எண்ணங்கள் தோன்றித்தான் இருக்கின்றன. வருண பேதம் நிலைக்க ஆரம்பித்த காலமுதலே வடநாட்டில் புத்தர்களாலும், தென்னாட்டில் சித்தர்களாலும் அது எதிர்க்கப்பட்டு வந்திருக்கிறது. அக்காலத்து அரசியல் ஆதிக்கம் சீர்திருத்தக்காரர்களுக்கு விரோதமாக இருந்தமையால் அவர்கள் முயற்சி பயன்படவில்லை. ஆனால் இக்கால நிலை வேறு. இப்பொழுது அரசியல் ஆதிக்கம் அந்நியர் வசம் இருப்பதாலும், கொடுமைப் படுத்தப்பட்ட மக்கள் எல்லாம் வருணபேதக்கொடுமையை உணர்ந்து விழித்துக்கொண்டமையாலும் இனி இத்தகைய உணர்ச்சியை அடக்கிவிடமுடியாது.

### எதிர்ப்புகள்.

நமது இயக்கத்தலைவர் திரு. ஈ. வெ. ராமசாமிப் பெரியாரின் தன்னலமற்ற உழைப்பின் பயனால் நமதியக்கம் நமது நாட்டு மக்களின் மனதை அதிகமாகப் பற்றிக்கொண்டு விட்டதுடன் அவரது லக்ஷியங்களைப் பின்பற்றி நடப்போரும் அதிகமாகிவிட்டனர். உலகில் தோன்றிய சீர்திருத்தக்காரர்கள் எவரும் தம் வாழ்நாளிலேயே தமது இலக்ஷியங்களை ஜன சமூகம் ஒப்புக்கொண்டு பின்பற்றப் பாக்கியம் பெற்றது கிடையாது. அத்தனிப் பெருமையை அடைந்தவரில் நமது தலைவர் திரு. ராமசாமியாரே முதன்மையானவராக இருக்கின்றார். அப்பெரியாரது இடைவிடாத உழைப்பினால் ஏற்பட்ட உணர்ச்சியின் மிகுதியினால் நமது மாகாண சுயமரியாதை முதலாவது மகாநாடு சீரும் சிறப்புடன் செங்கற்பட்டில் நடந்து அதில் பல முற்போக்கான தீர்மானங்களும் செய்யப்பட்டன. அதைக்கண்டதும்சிலருக்கு அடிவயிற்றில் நெருப்பும் பயமும் ஏற்பட்டு அதனால் நமதியக்கத்திற்கு விரோதமான எதிர்ப்புகளும் தோன்றியிருக்கின்றன. சமீபித்து வரும் பொதுத்தேர்தலும் அவ்வெதிர்ப்புகள் பலப்படுவதற்கு ஒரு காரணமாகும். சமூக வாழ்வுகளையும், சமயப்புரட்டுகளையும் வெட்ட வெளிச்சமாக்கும் நமது இயக்கத்தைக்கண்டு மருட்சியடைந்த சில சுயநலப் பண்டிதர்களும் வயிற்றுப்பிழைப்புக் கூலிகளும் நமது இயக்கத்தை மக்கள் தவறாக உணருமாறு விஷமப்பிரசாரம் செய்கிறார்கள். அரசியலில் தலைகாட்ட முடியாது காற்றுமறைந்து வந்த தேசிய புரட்டர்கள் வரப்போகும் தேர்தலைக்கருதி ஜனக்கூட்டத்தின் மனதை நமக்கு விரோதமாக மாற்றிவிட்டுப் பயனடையலாம் என்பதற்காக இத்தன்னல புலிகளுக்குக் கங்கணம் கட்டிவிட்டு விட்டனர். இதனால் ஏற்பட்ட பலம் காரணமாக இம்முதுகெலும்பற்றவர்களெல்லாம் கூடிக்கொண்டு நமது புனித இயக்கத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்வதற்காக ஆஸ்திக சங்கம் என்ற பெயரால் ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொண்டு அட்டகாசமும் செய்துவருகிறார்கள்.

### ஆஸ்திகப்புரட்டு.

இவ்வாஸ்திகப் புரட்டர்கள் நம்மை எதிர்த்துப்பேசும் வார்த்தைகளில் சில நாம் கூறாத ஒன்றைக் கூறியதாகச் சொல்லுவதாயிருப்பதோடு மற்றவைகள் வீண் புரட்டாகவும் வெளிவேஷமாகவும் விசால புத்தியற்ற தன்மையாகவுமிருக்கின்றன. ஆஸ்திகர்கள் என்று கூறிக்கொள்ளும் இவர்கள் கூற்றுப்படியே இவர்கள் ஆஸ்திகர்களாவென்று பார்த்தால் அதுவும் கிடையாது. ஆஸ்திகர்களென்றால் கடவுளைப் பற்றிய நம்பிக்கை உள்ளவர்கள் என்றுதான் பொருள். அதன்படி இவ்வாஸ்திகர்களெல்லாம் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் தானா? அப்படியானால் அவர்களின் கடவுள் எது? இந்த ஆஸ்திகதர்மிகளுக்கு அவர்கள் ஜீவனத்திற்கு உதவும் பணந்தான் கடவுளேயல்லாமல் வேறெதுவுமல்ல. அந்தக் கடவுளிடத்துத்தான் நம்பிக்கைகொண்டு வேலை செய்கிறார்களே யல்லாமல் உண்மைக் கடவுள் மீது அவர்கள் நம்பிக்கைகொண்டிருக்கவில்லை.

கடவுள் என்ற பதமே, கடந்தது, எல்லையற்றது, அளவிட்டுக்கூற முடியாதது என்பதாக அர்த்தம் கொள்ளக்கூடியதாயிருக்கின்றது. இத்தன்மையை குறுகிய எல்லைக்குள் அளவிட்டுக்கூறி கோயிலும் கட்டிக் கும்பிடவும் சொன்னால் அது அவ்வளவு அர்த்தமற்றது என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள். அக்கும்பிடும் செயலுடன் கூட குருக்களுக்குக் கூலியும் கொடு என்றால் இவர்கள்கொண்ட கோட்பாடுகளின் நோக்கம் ஒரு கூட்டத்தாருக்குக் கிடைக்கக்கூடிய கொள்ளைக்கு வழியாகுவதைத் தவிர வேறென்ன இருக்கமுடியும்? இயற்கையாகவே கடவுள் என்பது அறிவிற்கு எட்டாததாயிருக்கின்றது. ஆலோசனைக்கு புலப்படாததாகயிருக்கின்றது. ஆராய்ச்சியினாலும் தெரிந்துகொள்ள முடியாமலுமிருக்கிறது. அதை அனுபவத்திலும் உணருவது அசாத்தியமே. இவ்வெல்லையற்ற சங்கதியை யோசித்து யோசித்து ஒரு முடிவிற்கும் வரமுடியாமல் பல அறிஞர்கள் உயிர் துறந்தும் போய்விட்டனர். இவ்வெட்டாத வேலையில் நாம் ஈடுபடுவதில் என்ன பயன்? இதில் செலவிடும் நேரத்தையும் இதற்காக விரயப்படுத்தப்படும் பொருளையும் நாம் கண்ணுக்கெதிரே காணும் மனிதக்கடவுள்களுக்கு உபயோகிக்கலாகாதா? அறிவுடைய உலகமானால் இதை ஆராயத்தலைப்படும். இக்காலத்தில் கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் இருக்கக்கூடிய மாதிரி மிக்க கேவலத்திலும் கேவலம்! கடவுள் இல்லங்களென்று கருதப்படும் நமது ஆலயங்களெல்லாம் விபசார விடுதிகளுக்குச் சமானமாயிருக்கிறது என்பதை சமூக—மதச் சீர்திருத்தத்தில் மிதமான எண்ணம் படைத்த திரு. காந்தியே கூறியிருக்கிறார் என்

ருல் நாம் அதிகம் சொல்வானேன்! கோவில் வழிபாட்டின் தன்மை கடவுள் நம்பிக்கையை உண்டுபண்ணுவதற்கு மாறாக கடவுள் நம்பிக்கையையே கெடுத்துவிடுகின்றது. அத்துடனுமில்லாமல் அதன் பேரால் அதிக்கிரமமான செயல்களும் அதிகப்படியான செலவுகளும் ஏற்படுகின்றன. நமக்கு இப்பொழுது சமயப்பூசாரிகள் கூறும் கடவுள்—அவர்கள் கூறியபடியெல்லாம் நம்பி நாம் கட்டிவைத்துள்ள கடவுள், எல்லைக்குள்ளடங்கியதாய், துன்பத்திற்குரியதாய் அன்பு முறைக்கு விரோதியாய், அறிவுக்கு முரண்பட்டதாய், ஆத்ம உணர்ச்சிக்குப் பங்கம் விளைவிப்பதாய், இயற்கைத் தன்மைக்கு மாறானதாய்க் காணப்படுவதால் அதை நாம் ஒழித்துவிட ஆசைப்படுகிறோம். இதற்காக நம்மை நாஸ்திகர்கள் என்று கூறும் ஆஸ்திகர்கள் கடவுள் பெயரால் ஏமாற்றிப் பிழைப்பவர்களாகவும் கடவுள் நம்பிக்கையை உண்மையாக உணர்ந்து அதன் வழி நடக்காதவர்களாகவுமிருக்கின்றனர். இவர்களை எவ்வாறு ஆஸ்திகர்கள் என்று கூறுவது?

எடுத்ததற்கெல்லாம் மதம் என்ற பெயராலும் சாதியென்ற பெயராலும் நாம் சுயமரியாதை இழந்தவர்களாக இருப்பதால் மதப்புரட்டுகளையும் சாதிப் புரட்டுகளையும் அழித்தொழிக்க விரும்புகின்றோம். இன்றளவும் நமது நாடு பார்ப்பனீயக் கொடுமையிலும் அதற்காதாரமான வருணாசிரம தருமக்கோட்பாட்டாலும், அவற்றை நிலைநிறுத்துவதற்கேற்பட்ட வேதசாஸ்திர புராண இதிகாசங்களாலும் பாழ்பட்டுக்கொண்டு வருவதால் நமது நாட்டின் விடுதலைக்கு இவையெல்லாம் அடியுடன் ஒழிக்கப்படவேண்டும் என்று கூறுகின்றோம். ஆராய்ச்சியினால் நிர்த்தாரணம் செய்யப்பட்ட இவ்வுண்மைகளை ஜனங்களுக்குத் தொடர்பான பிரசாரம் செய்வதன் மூலம் எடுத்துக்காட்டி விஷயமுணர்த்தவேண்டும். இவ்வாறு நமது கொள்கைகளை மக்கள் பிறழ உணராமலிருப்பதற்காகவும் சரிவர அறிந்துகொள்வதற்காகவும் நாம் கட்டுப்பாடான முறையில் ஒரு ஒழுங்குக்கு உட்பட்டு பிரசாரம் செய்தல் மிகமிக அவசியம். இன்றேல் பாமரமக்களுக்கு நமது விரோதிகளின் வார்த்தையைக் கேட்பதால் நாம் சொல்வதின் உண்மை தெரியாமல் போய் விடும். இப்பொழுது நமக்கு விரோதமாகப் பிரசாரம் செய்யும் ஆஸ்திகர்களுடன் வருணாசிரமப் பார்ப்பனர்களும் நமக்கு விரோதமாக வேலை செய்கின்றனர். அவர்கள் பார்ப்பான் என்னதான் சாஸ்திரத்திற்கு விரோதமாகயிருப்பினும், அவன் பிறவியினால் உயர்ந்தவன் என்றும் ஏனையோர் யாவரும் தற்காலத்தில் சூத்திரர்களே என்றும் கூறுகின்றார்கள். சாதி தத்துவம் நம் நாட்டைப் பிடித்த பீடையாகும். அதை குழிவெட்டிப் புதைத்தாலன்றி இந்துக்கள் எவ்வோருக்கு கதிமோட்சமில்லை. வருணாசிரம தர்மிகள் தங்கள் பழயகட்டுப்பாட்டை என்றென்றைக்கும் நிலைக்கவைக்கப்பார்க்கின்றனர்; அதை நாம் தகர்த்தெறியவேண்டும். இதுவும் தக்க பிரசாரமின்றி லேசில் முடியாது.

## வரப்போகும் தேர்தல்.

திடீரென்று ஆஸ்திகர்கட்கும் வருணாசிரமக்காரர்களுக்கும் நாட்டைப்பற்றித் தோன்றியுள்ள கவலையின் இரகசியமெல்லாம் அடுத்துவரும் தேர்தலில் பார்ப்பனர்களும் பார்ப்பனக் கூலிகளும் வெற்றி பெறவேண்டுமென்பதுதான். தேர்தல் வருங்காலங்களிலெல்லாம் இப்பெரிய கவலை இவர்களுக்கு வந்துவிடுவது சகஜம். சென்ற தேர்தல்களில் 'மழைகூட ஜஸ்டிஸ் கட்சியால்தான் பெய்யவில்லை' என்று கூறியதும்போல இத்தேர்தலுக்காக, மதத்தின் பேராலும் கடவுளின்பெயராலும் தேர்தல் பிரசாரம் செய்ய ஆரம்பித்திருக்கின்றார்கள். அரசியலதிகாரங்களையெல்லாம் கைப்பற்றிக் கொண்டு பார்ப்பனரல்லாதாரை என்றென்றைக்கும் அமிழ்த்திவைக்கப் பார்ப்பன அரசியல் தந்திரிகள் பலவகையிலும் முயற்சிப்பார்கள். அரசியலில் பார்ப்பனர்களை ஏமாற்றித் திக்குமுக்காடச் செய்துவந்த நமது மாபெருந் தலைவர் பானகலரசர் நமது துர்ப்பாக்கியத்தின் காரணமாக காலஞ்சென்றுவிட்டமையால், இத்தேர்தல் சமயத்தில் பார்ப்பன அரசியல்வாதிகள் தங்கள் சாமர்த்தியங்களையெல்லாம் காட்டுவார்கள். ஆதலால் வரப்போகும் பொதுத்தேர்தலில் சட்டசபைகளுக்கு பார்ப்பனரல்லாதாரே பெரும்பாலோராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு நாம் பலமான முயற்சி செய்யவேண்டும். அதிலும் சமயவெறியும் சாதிப்பற்றும் அற்றவர்களாகவும் சுயமரியாதையாளராகவும் அவர்களிருக்க நாம் பார்த்துக்கொள்ளவேண்டும்.

## நமது திட்டங்கள்.

இவ்வாறு நாம் செய்ய வேண்டிய பிரசாரத்தில் சாதி பேதத்தைத் தகர்ப்பதையும், சமயப் புரட்டை ஒழிப்பதையும், பார்ப்பனீய ஆதிக்கத்தைத் (பார்ப்பனர்களையல்ல) தொலைப்பதையும் முக்கியத் திட்டங்களாகக் கொள்ள வேண்டும். மதுவிலக்குப் பிரசாரத்தையும் ஒரு அம்சமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இவ்வழியிலெழும் கொள்கைகளை நாம் காரியத்தில் நடத்திக் காட்ட வேண்டும். இந்த நமது கொள்கைகளையெல்லாம் அமுலுக்குக் கொண்டு வருவதில் பெண்களின் உதவியும் நமக்குத் தேவை. நமது நாட்டுப் பெண்கள் உலக இயலை அறிய வகையில்லாது பழய குருட்டு எண்ணங்களுடன் வாழ்ந்து வரும் நிலையில் நமது முற்போக்கான எண்ணங்கள் அவர்களுக்குச் சம்மதமாகயிருக்காது. ஆனால் நாம் அவர்களுக்குத் தகுந்தபடி அறிவு உணர்ச்சியுண்டாக்க வேண்டும். எதுவரை நாம் நமது பெண்களை வேலைக்காரிகளாகவும் பிள்ளை பெறும் இயந்திரங்களாகவும் மட்டும் வைத்திருக்கின்றோமோ—அதுவரை நமது சமூகத்திற்கோ-தேசத்திற்கோ முன்னேற்றம் கிடைக்கவே கிடைக்காது. ஆதலால் பெண்கள் விடுதலைக்காக நாம் பலத்த கிளர்ச்சி செய்து அவர்களுக்கும் சுதந்திரம் ஏற்படுத்திக்கொடுக்கவகை செய்ய வேண்டும்.

## நமது அமைப்பு.

நமது இயக்கத்திற்காகப் பிரசாரம் செய்வது தொண்டர்களாகிய நமது இன்றியமையாத கடமையாகும். அப்படிப் பிரசாரம் செய்வதற்குப் போதிய உதவிகளைச் செய்ய வேண்டியது நமது பெரியார்களின் கடன். பிரசாரம் செய்வதற்கென கட்டுப்பாடான ஏற்பாடும் தொண்டர்களுக்கென தனியாக ஒரு அமைப்பும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். பிரசாரம் செய்வதற்குத் தொண்டர்களை நன்கு பயிற்சி செய்து விடவும் வேண்டும். தொண்டர்களெல்லாம், நமது கொள்கைகளைத் தவறில்லாமல் எடுத்துக் கூறுவதற்கு இவ்வாறு பயிற்சியளிப்பது மிகச்சிறந்த சாதனமாகும். நமது இயக்கத் தலைவர், சுயமரியாதைத் தொண்டர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டியதற்காக ஏற்படுத்த உத்தேசித்திருக்கும் ஸ்தாபனத்தை சீக்கிரம் ஏற்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தொண்டர்களுக்கென ஒழுங்குக்குட்பட்டதும், கட்டுப்பாடுடையதுமான அமைப்பில்லாமையாலும், அவர்கள் பிரசாரம் செய்வதற்கு வேண்டிய வசதிகளுக்கு முறையாகக் கிடைக்கக்கூடிய உதவிக்கு வழியில்லாதிருப்பதாலும், பெரும்பாலான தொண்டர்களுக்கு மிகுந்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படுகின்றது. இப்பல கஷ்ட நஷ்டங்களுக்கிடையே அவர்கள் தங்கள் கொள்கைகளுக்காக ஊசலாடிக் கொண்டு தொண்டு செய்து வருகின்றனர். இதைப் போக்கி அவர்களுக்குப் பலத்த ஆதரவளித்து அமைத்துக் கொடுக்க வேண்டியது தலைவர்களது கடமை.

தனக்கென வல்லாது பிறர்க்கென தொண்டு செய்தலே நமது தொண்டர்களின் நோக்கமாகயிருக்க வேண்டும். நாம் செய்ய வேண்டிய வேலைகளெல்லாம் கிராமங்களில்தான் அதிகமாகச் செய்யப்பட வேண்டியிருக்கின்றன. இளந்தொண்டர்களாகிய நம் போன்றோர்கள் தான் இத்தகைய வேலைகளை வெற்றிபெற நடத்தி வைக்கக்கூடும். துருக்கி, சீனா, ஜப்பான் போன்ற வெகு துரிதத்தில் முன்னேற்றமடைந்த தேசங்களில் நம் போன்ற இளைஞர்களின் தியாகவுணர்ச்சி பெற்ற உழைப்புத்தான் பயனளித்தது. அதைப் போன்றே நமது சுயமரியாதைத் தொண்டர்படையும் உதயமாகி நமது நாட்டிற்கும் நமது சமூகத்திற்கும் நலம் புரியட்டும்! தொண்டர் மகாநாட்டில் குழுமியுள்ள நாம் இக்காரியங்களை நன்கு யோசித்து தக்க முடிவுக்கு வருவதுடன் நேர்மையான தீர்மானங்களைச் செய்து அதன் வழி நடக்க வேண்டுமென்பதையும் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

---

## கோலாக்கங்ஸார் இந்து மகாஜன சங்கம்,

மலாய் நாட்டில் பிரதானப் பட்டணமாகிய கோலக்கங்ஸாரில் சென்ற 12-3-29ல் ஸ்ரீமான் சின்னையா உபாத்தியாயர் தலைமையின்கீழ் இந்துமகாஜன சங்க சார்பில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் பிரதம காரியதரிசி ஸ்ரீமான் ரெ. ரா. ஐயாறு முதலியவர்களால் தமிழ் கல்வி, கைத்தொழில், ஜீவபலி, சிக்கனம், மூடப்பழக்கவழக்கம் ஆகியவற்றைப் பற்றி மிக விளக்கமாகப் பேசப்பெற்றது. ஒரு கிருப

# இந்து மதம்.

## டாக்டர் மூஞ்சிக்கும் மிதவாதி பத்திராதிபருக்கும் நடந்த ஒரு சம்பாஷணை.

வட இந்தியாவில் பார்ப்பனர்களின் ஆதிக்கத்திற்காக ஸ்தாபித்திருக்கும் இந்து மகாசபைத் தலைவராகிய டாக்டர் மூஞ்சி அவர்களுக்கும் மலையாள நாட்டைச்சேர்ந்த கள்ளிக்கோட்டை (Calicut) தீயர் வகுப்பின் பெருந்தலைவரும் "குடி அரசு" கொள்கைகளைப் பூரணமாகக் கைக்கொண்டிருப்பவரும்மிக்கசெல்வமும் செல்வாக்குமுடையவரும்பிரபல பத்திரிகையாகிய"மிதவாதி" பத்திரிகையின் ஆசிரியருமான திருவாளர் சி. கிருஷ்ணன் பி. ஏ., பி. எல். அவர்களுக்கும் 'மிதவாதி' பத்திரிகை ஆபீசில் ஓர் இனிய சம்பாஷணை நடந்தது. அச்சமயம் சபரி ஆசிரமம் மானேஜரான திரு கிருஷ்ணசாமி அய்யர் அவர்களும் எதிர்பாராது வந்து சேர்ந்தார். பண வசூலுக்காக பண்டித மாளவியா அவர்களுடன் வந்திருந்த டாக்டர் மூஞ்சி அவர்கள் இந்து, சங்கதன் பண்டுக்குப் பணவுதவி செய்யவேண்டிய காரியத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தார்.

பத்திராதிபர்:—நான் இந்து வல்ல. புத்த மதத்தைச்சேர்ந்தவன்,

டாக்டர் மூஞ்சி:—புத்த மதத்தார் ஜைன மதத்தார் யாவரும் இந்துக்கள் தான் என்பதற்கு ஆதார முண்டு. (ஓர் கவி பாடினார்)

ப:ர்.—சமயத்திற்கு தக்கவாறு இந்துக்கள் அவ்விதம் சொல்லிக்கொள்வார்கள். எப்படியென்றால் இந்து மதத்தின் மேலான சத்து தான் புத்த மதம் என்றும், புத்தரே விஷ்ணுவின் ஓர் அவதார மென்றும் சொல்லிக்கொள்வார்கள். ஆனால் புத்த மதக்காரன் என்ற பெயரைக்கேட்டால் மாத்திரம் இந்துக்களுக்குக் கோபம் வந்து விடும் ஆதலால் "இந்து" என்ற பெயரைக் கண்டாலே எனக்குப் பிடிப்பதில்லை. அன்றியும் எவ்வித அபிமானமும் தோன்றுவதற்கில்லை.

டாக்டர்:—அது சரிதான்.

ப:ர்—இதோ இருக்கும் திரு. கிருஷ்ணசாமி அய்யர்முன்னிலையில் நான் அறுபதுகஜமோஎன்பது கஜமோ விலகி இருக்கவேண்டும். அத்தனை சஜதூரம் விலகி நான் நிற்கவில்லையானால் அய்யர் அசுத்தமாய்ப்போய்விடுவார். அவ்விதம்அசுத்தமாவதற்கு முக்கிய காரணம் நான் கிருஸ்தவனாகவோ, முஸ்லீமாகவோ இல்லாததினாலல்லவா?

கிருஷ்ணசாமிஅய்யர்:—நாங்கள் சபரி ஆசிரமத்தில் என்ன செய்கிறோம் என்பது தெரியுமல்லவா? நாயாடியும், புலையனும், பறையனும் ஆகிய யாவரும் ஒன்றாயிருந்து உண்ணுகிறார்கள்.

ப:ர்:—சரி. அப்படி உண்ணுகின்ற உங்களைப் பார்ப்பனர்கள் ஜாதியைவிட்டுத் தள்ளிவைத்திருக்கிறார்களல்லவா?

அய்யர்:—ஆம்.

ப:ர்;—சீர்திருத்தம் செய்வதென்று வெளிப்பட்டவர்கள் யாவரும் இந்துக்களுக்கு தீண்டாதவரே யாவர். சதாரணமாக வேறொரு மனிதனோடிருந்து சமபந்தி போஜனம் செய்வதே தாய்நாட்டிற்காகச்செய்யும் ஓர் பெரிய தியாகம் போல் கருதுவோர் இந்துக்களேயல்லாமல் பூலோகத்தில் வேறே யாராவது உண்டோ? பாரதமாதாவின் பேரால் வேலைசெய்கிறவர்கள் தீயர்களுடனிருந்து பால்மாத்திரம் சாப்பிட்டு புகழடைகிறார்கள். இதற்குமேலான தியாகம் இனி இல்லையென்பதாகப்பால் குடிக்கிறவர்கள் நினைக்கின்றார்கள். இப்பேர்பட்ட"பெரிய தியாகிகளை"க்கொண்ட ஒரு நாடுவேறுஎங்காவது உண்டா?

டாக்டர்.— இவ் விதமானநம்பிக்கைகளுக்கும் நடபடிகளுக்கும் மிகுந்தவித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. தீண்டாதவர்களையும், தொடாதவர்களையும் இந்து மதசாஸ்திரங்கள் உண்டாக்கவேஇல்லை. அறிவில்லாதவர்கள் அதனை இந்துமதம் என்பதாகக்கருதுகிறார்களேதவிர வேறில்லை.

ப:ர்—இப்போது இந்துக்களிடையிலுள்ள சங்கராச்சாரிகள் இந்துமத சாஸ்திரங்களை வாசிக்காதவர்களும் அறியாதவர்களுமல்ல. தீண்டாதவர்களிடத்தும், தாழ்த்தப்பட்டவருப்பினரிடத்தும், இச்சங்கராச்சாரிகளின் அருவருப்பான அவளையபாமரமக்களைவிட அதிகமாகத்தானிருக்கின்றது. [illegible] ஒப்புக்கொள்ளவேண்டியதாயிருக்கின்றது. அவர்களை என்ன செய்யச்சொல்லுகிறீர்கள்?

டாக்டர்:-ஓ! சங்கராச்சாரிகளின்காரியம் போகட்டும்! அவர்களை இக்காரியங்களில் பொருட்படுத்தவேண்டியதில்லை.

ப:ர்:-சங்கராச்சாரிகளை லக்ஷியம் செய்யவேண்டியதில்லை என்பதை எந்த இந்து ஒப்புக்கொள்வான்? அது தான் போகட்டும். இந்துக்களாக இருந்தால் பகவத்கீதை முதலானவைகளை முக்கியமாகக்கருதவேண்டுமல்லவா? அவைகளில் நான்கு சாதியும் கடவுளால் ஏற்பட்டதென்றல்லவா ஆதாரம்! அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

டாக்டர்- ஆம். அதில் கூறப்பட்டிருப்பதெனில் ஒவ்வொருவருடைய குணங்களை அனுசரித்து ஜாதிநிச்சயம்செய்யவேண்டும். என்பதாகும்.

ப:ர்- அப்படி வைத்துக்கொள்ளலாமென்றாலும் நாம் இப்பொழுது கீதையைநம்புகின்றவர்களை நடவடிக்கையில் அவ்விதம்காண்கின்றோமா? அதுவுமல்லாமல் இனிகுணத்தை அடிப்படையாகக்கொண்டு ஜாதிஏற்பட்டதானால் அவ்விதம் ஓர்பாகுபாடு ஏற்படுத்தவேண்டிய ஆவசியமதான் என்ன? இவ்விதம் ஒருபாகுபாடு பூவுலகில் வேறு எங்காவது பார்க்கின்றோமா? அந்நாடுகளில் உள்ளவர்களும் இம்மாதிரியானபிரிவு இல்லாமல் காலத்தைத் தள்ளிக்கொண்டுதானே போகின்றார்கள். இத்தகைய ஜாதிவித்தியாசங்களினால் இந்தியாவிற்குஏதாவது பொதுலாபம் ஏற்பட்டதாக யாராவதுசொல்லமுடியுமா? அதிகமாக ஜனங்களுக்குக் கஷ்டமாகவேதான் முடிந்திருக்கின்றது. அன்றியும் பகவத்கீதையில் சொல்லுகின்றபடி சாதி பாகுபாடு செய்ய யாராலாவது முடியுமா?

டாக்டர்-எல்லாம் முடியும். இங்கிலாந்தில் இறந்துபோன மனைவியின் சகோதரியை கலியாணம் செய்துகொள்ளும் விஷயத்தில் எவ்வளவுகாலம் போட்டி நடந்ததின்பேரில் அம்மசோதா நிறைவேற்றப்பட்டது? மெதுவாகச்சென்றால் எந்தக் காரியமும் சாதிக்கலாம்.

ப:ர்- அதுதான் நானும் சொல்லுகிறேன். நாகரீக முள்ள இங்கிலாந்தின் நிலை இவ்விதமானால் நம் இந்தியநாட்டில் ஏதாவது ஒருசீர்திருத்தம் உண்டாவதற்கு இன்னும் எத்தனை நூற்றாண்டுகள் ஆகும்? இவ்விடத்தில் நாயர் (மலையாளிகள்) வகுப்பில் நூற்றுக்குமேலான ஜாதியுண்டு. சிலருக்குள் பந்திபோஜனமில்லை. சிலருக்குள் கலப்புவிவாகம் கூடாது. எவ்வளவுதான் சீர்திருத்தம் உண்டாகி நாயர்களிடையிலுள்ள ஜாதி வித்தியாசங்களுக்கு சொல்லத்தக்கநிலையில் ஏதாவது மாறுதல் இதுவரை உண்டானதாகஏற்படவில்லை என்பது எனது அபிப்பிராயம். ஒரு தாழ்ந்தஜாதி நாயரிடம் உயர்ந்த ஜாதி நாயருக்குள்ள கேவலமானமனப்பான்மை இன்னும் நிலைநின்றுவருகின்றது. விஷயம் இப்படியிருக்க எங்களைப் போன்ற சில தாழ்த்தப்பட்ட ஜாதியாரின் நிலைமையைப்பற்றிக்கவனிப்பது எக்காலம்? அதற்காக இனியும் எத்தனை காலம் பொறுத்திருப்பது?

கி-ஐயர்—பார்ப்பனருள் ஜாதி வித்தியாசங்களைப்பற்றிக் கவனியாமல் நடப்பவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.

ப:ர்—உண்டு. அவர்கள் எல்லோரையும் கூடமானால் அவர்களுடைய இனத்தவர்கள் சாதியைவிட்டுத் தள்ளவும் இழிவாய்ப் பேசவும் செய்து வருகின்றார்கள். இந்தக் கள்ளிக்கோட்டையில் தானே உமக்கு எத்தனையோ உதாரணம் உண்டு.

டாக்டர்—நமக்கு எந்த நிலையிலாவது நம் இந்து சமுதாயம் நிலைபெறவேண்டுமானால் இந்த ஆசாரங்களை யெல்லாம் [illegible] தள்ளி இந்து சங்கத்தைப் பலப்படுத்தினாலன்றி யாதொரு விமோசனமும் இல்லை.

ப:ர்—அது சரிதான் இந்துக்கள் இதனை ஆலோசித்து நடக்காவிட்டால் இந்திய ராஜ்யம் காலக்கிரமத்தில் ஓர் முஸ்லீம் ராஜ்யமாகும். பஞ்சாப், வங்காளம் என்னும் தேசங்களில் ஜனசங்கியில் நூற்றுக்கு 53 பேர் முஸ்லீம்களாகவே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தேசத்தில் இந்துக்கள் எப்படி சுயமரியாதையோடு காலங்கழித்து வருவார்கள் என்றுதான்நான் எண்ணுகிறேன்.

டாக்டர்— அது மிக்க கஷ்டமான காரியம் தான். இந்துக்களைப் பார்க்கிலும் முஸ்லீம்கள் அதிகரித்திருக்கும் கிராமங்களில் இந்துப்பெண்களை முஸ்லீம்கள் தூக்கிக்கொண்டு போவதும் சகஜந்தான்.

ப:ர்—நான் இந்த விஷயங்களைப்பற்றிப் பத்திரிகைகளில் வாசித்து நன்றாய் அறிந்திருக்கிறேன். இந்துக்கள் என்பவர்கள் அடைந்துவரும் துன்பங்கள் கொஞ்சமல்லவென்பது எனக்குத் தெரியும். ஆகையினால் நான் என்ன சொல்லுகிறேன் என்றால் இந்து மதத்தைச் சீர்திருத்தம் செய்தல் என்ற பாழான வேலைக்குக் காலத்தை வீணாகக் கழிக்கவேண்டாம். இந்து மதம் என்றால் என்ன? என்று கண்டுபிடிப்பதற்குக்கூட எவருக்கும் எந்தப் பண்டிதருக்கும் முடியவில்லை. இனி முடிந்தாலுங்கூட முக்காற்பகுப்பேர் அந்த அபிப்பிரா

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வுள் எண்ணத்தையும், அதனால் ஏற்படும் பொருட்செலவையும் மனிதனுடைய அறிவுவளர்ச்சியில் செலவு செய்து, அறிவால் ஒழுக்கமறிந்து அறிவொழுக்கத்தோடு வாழ முயற்சிக்கவேண்டுமேயல்லாது கடவுள் எண்ணத்தால் கடவுள் பயத்தால் மோட்சநரகசிருஷ்டியால் ஒழுக்கம் ஏற்படாதென்பதே எங்கள் முடிவான துணிபு ஆதலால் இத்தகைய கடவுள் வேண்டாம்.

கணக்கற்ற சிறைச்சாலைகளும் அண்டனைகளும் பிரத்தியட்சத்தில் இருந்தும் மனித வர்க்கம் ஒழுக்கமற்ற குற்றங்கள் நாடோறும் புரியவில்லையா? அறிவற்றதனால் அல்லவா? ஆனதால் நீங்கள் மக்கள் அறிவை வளர்க்காமல், கடவுள் உண்டென்பிரசாரம் செய்யப் புறப்பட்டிருக்கும் ஆஸ்திகக் கூலிகளால் ஒழுக்கத்தை ஸ்தாபிக்கப் போவதில்லை என்பது திண்ணம். எங்கோ மறைவான உலகத்திலுள்ள கடவுள் தண்டித்துவிடுவார் ஆதலால் தருமஞ்செய், புண்ணியஞ்செய், ஒழுக்கஞ்செய் என்று சொல்வது மனிதனை மூடத்தனத்தில் ஆழ்த்துமேயொழிய அறிவுவளர்க்காது, ஒழுக்கத்தை ஒருபோதும் பெருக்காது. எனவே பயத்தை வளர்க்கும் கடவுள் எண்ணமும் அப்பயத்தால் அடிமைத்தனத்தையும், அறியாமையையும், வறுமைப்பிணியையும் வளர்க்கும் கடவுள் எண்ணமும் நம்பிக்கையும் இந்நாட்டு மக்களுக்கு வேண்டாமென்று முக்காலும் சொல்லுகிறோம்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரத்தில் உயிர் விடும்படியான சைவப்பெரியார்கள் அநேகரிருக்கிறார்களே, அவர்கள் பிள்ளைகளுக்குக்கூட ஏன் வேதம் சொல்லிக்கொடுக்கப்படாது? அசல் சூத்திரர்கள்தான் போகட்டும், சற்சூத்திரர்களென்று சம்மதப்பட்டுக் கொண்டிருக்கும் சைவப்பெரியார்களுக்குக்கூடவா இனியும் சிவபெருமான் சொன்ன வேதம்படிக்க அதிகாரம் வரவில்லை?

பூணூல் போட்டுப் பார்ப்பார ஜாதியாகத்தான் சிவபெருமான் விளங்குகிறார். அவர் அளித்த வேத சாஸ்திரத்தை அவர் ஜாதியாருக்கே சொல்லிக்கொடுக்கவேண்டும். மற்றவர்கள் சமணர்களைத் தொலைக்கவும் பார்ப்பனர்களின ஆதிக்கத்தைப் பரவச் செய்யவும் திருஞான சம்பந்தரால் பக்குவம் பண்ணப்பட்டார்கள் என்பதை பல நாட்களுக்கு முன்னே பல சைவப் பெரியார்கள் தெரிந்தே இருந்தார்கள். சகுண உபாசனைக்குக் கடவுளைக் காட்டவேண்டுமானால் பார்ப்பார ஜாதியாகத்தான் காட்டவேண்டுமென்பதென்ன?

மதத்தின் தத்துவம் வேதத்தின் உத்தரபாகமாகிய ஞானகாண்டத்திலிருக்கிறது. அதை மற்ற ஜாதிக்காரர்களுக்குப் போதிக்கப்படாதென்றும் சொல்லுகிறார்கள். இது அநேக நாட்களாகச் சொல்லப்பட்டு அனுபோகப்படுத்தி வழக்கத்திலும் கொண்டுவரப்பட்டு தமிழ்த் தேசத்தாரையெல்லாம் "சூத்திர"ரென்று ஆதிசைவப் பாப்பானும் ஸ்மார்த்தப் பாப்பானும் பலஜாதி ஒன்று சேர்ந்த வைஷ்ணவப் பாப்பானும் சொல்லி முடித்ததோடு பெரியபுராணக் கதை மூலமாகவும் நிச்சயப்படுத்தி ஒத்துக்கொள்ளச்செய்து அதை அப்போது ஆட்சேபித்தவர்களை சற்சூத்திரனென்று ஏமாற்றினவரையில் முடிந்த விஷயமாகும்.

தன்னுதிக்கத்துக்கும் தன் லாபத்திற்கும் ஏற்படுத்தின மோசடியான வஞ்சனைகளை எடுத்துச் சொல்லும் சுயமரியாதைக் காரர்கள் பேரிலுள்ள பொறாமையினாலும் பார்ப்பானிடம் பேசியிருக்கும் ஒப்பந்தப்பிரகாரமும் திரு. கலியாணசுந்தர முதலியார் காங்கிரஸ் பிரசாரகர் மூலமாக சுயமரியாதைக்காரர்களை பகிஷ்கரிக்க வேண்டுமென்று சைவ மகாநாட்டில் தீர்மானம் கொண்டுவந்து தீர்மானமும் செய்தார்களாம். பகிஷ்கரிப்பதற்கு எடுத்துச்சொன்ன காரணம் பார்ப்பார்களை அதிகம் திட்டுவதும் சமயப் பெரியவர்களைக் குற்றம் சொல்லுவதுமாகும்.

திரு. கலியாணசுந்தர முதலியார் பஞ்சம் பிழைத்துத் திரியும் பண்டிதரானதினால்தான் பார்ப்பானைக் குற்றம் சொல்லுவதற்குச் சைவ மகாநாட்டில் மறைந்திருந்து சுயமரியாதைக்காரர்களின் பேரில் குற்றம் சுமத்தினார். பரம்பரைச் சைவத்தை இவர் பார்த்திருந்தால் சைவத்தில் பார்ப்பானைக் குற்றம் சொல்லாமலிருக்கமுடிந்திருக்காது. இதற்கு முன்னிருந்த பெரிய சைவப் பண்டிதர்களெல்லாம் பார்ப்பானைக் கண்டித்தது கணக்கிலடங்காது. பார்ப்பான் ஆகம சாஸ்திரங்களை அபகரித்தை வெல்கின்றான். எந்தப் பெரிய சைவனையும் சூத்திரன் என்கின்றான். அப்படி சூத்திரனென்று சொல்லி அவருக்கு பின்னால் வேதம்படிப்பதை ஆக்ஷேபிக்கிறான். அவருக்கு நைவேத்தியம் வைத்துப் படைப்பதற்கு பயப்படுகிறான். பார்ப்பானிடம் பரிசு வாங்கும் அந்தவழியில் சைவத்தை அமைக்க நினைக்கும் கலியாணசுந்தர முதலியார் காணும் பலன் ஒன்றுமில்லை.

---

யத்தை சம்மதிக்கவுமாட்டார்கள்' ஒரு புண்ணியவான் இந்துமதம் என்று கூறுவதை மற்றொருவர் இந்துமத மல்லவென்று கூறுவார். சிலருக்கு கோவிலும் பூஜையும் இந்துமதமாகும். வேறு சில இந்துக்களுக்கு அவை குருட்டு நம்பிக்கையாகும். இந்த சமுதாயத்தை சீர்திருத்த வேண்டுமானால் அவர்கள் புத்தமதக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்து மதத்திலுள்ள சகல அழுக்குகளும், குருட்டு நம்பிக்கைகளும் ஒழிந்ததே புத்த மதம் என்று இந்துக்களில் பல பெரியார்களும் சம்மதிக்கிறார்கள். இந்து தேசமானது எப்பொழுது சீர்பெற்று இருந்ததென்றால் புத்த மதம் வளர்ந்தோங்கி இருந்த காலமேயாகும் என்று சரித்திர ஆராய்ச்சியாளர் ஒப்புக்கொள்ளுகிறார்கள். புத்தர் மகாவிஷ்ணுவின் அவதாரமென்று இந்துக்கள் சொல்லுகிறார்கள் ஆகையினால் நாமெல்லோரும் புத்தமதத்தைச் சேர்வதில் சங்கடம் என்ன? இந்து என்ற ஒரு பெயருக்கு மாத்திரம் இவ்விதம் சண்டை போட்டுக்கொண்டிருப்பது எதற்காக? இந்து என்ற பெயரை விட்டுவிடுவதில் நாம் இவ்வளவு தாமதம் வைத்துக்கொள்வது எதற்காக?

டாக்டர்—புத்த மதத்தினிடத்து எங்களுக்கு யாதொரு விரோதமும் இல்லை. புத்தமதம் வேண்டுமென்று கூறுவதில் எனக்கு யாதொரு அதிசயமும் தோன்றவில்லை. இந்து மதத்தாரிடமிருந்து உங்களைப் போன்ற சில சமுதாயங்களுக்கு யாதொரு உதவியும் உண்டானதில்லையே என்பது தான் எனது சங்கடம்.

ப-ர்—நீங்கள் என் விருந்தினராய் இங்கே வந்திருப்பதால், நான் தங்களுக்கு வெறுப்பைத்தரும்படியாக ஏதேனும் கூறியிருப்பேனாகில் மன்னிக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்களெவரும் நல்லெண்ணத்துடன் உழைப்பவர்களென்று எனக்கு நன்றாய்த் தெரியும், தற்கால இந்த சமுதாய நிலைக்கு நீங்களும் நானும் உத்தரவாதியல்ல என்பதை நாமிருவரும் அறிவோம் என்று பல வாறு பேசிய பின்னர் சந்தோஷமாகப் பிரிந்து கொண்டனர்.

## பெரிய பைத்தியக்காரத்தனம்,

தென் காசியைச் சேர்ந்த ராசபாண்டி என்னும் கிராமத்தில் உண்ணாமலைத் தேவர் என்பவரும் அவரைச்சேர்ந்த சிலரும் குளக்கரைப் பனைமரத்தடியில் ஒரு சர்ப்பம் இருப்பதாகவும் அதை சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்குச் செலுத்த வேண்டும் என்றும் அதற்காக எல்லாரும் காவடி எடுத்துக்கொண்டு அங்கு வந்து சேரவேண்டும் என்றும் அப்போது அந்த சர்ப்பம் வெளிவந்து வேலாயுதத்தைச் சுற்றிக்கொள்ளும் என்றும் அதை ஷை உண்ணாமலைத் தேவர் தோளில் வைத்துக்கொண்டு சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு மேளவாத்தியங்களுடன் போவாரென்றும் சொல்லி சுற்று பக்ககிராமங்களில் பணமும் தானியமுமாகச் சுமார் ஐந்நூறு ரூபாவரை வசூல் செய்தார்கள். குறிப்பிட்ட நாளாகிய 22—5—29 தேதி. சுற்றுப்பக்க கிராமங்களிலிருந்து ஆண்களும் பெண்களுமாக ஏராளமான ஜனங்கள் இந்த அதிசயத்தைப் பார்க்க கொடுமையான வெய்யிலையுங்கூட லட்சியம் செய்யாமல் வந்துகூடிவிட்டார்கள். அமைதியைக் காக்க போலீஸ் பந்தோபஸ்தும் இருந்தது. பிற்பகல் 3 மணிவரை காவடிக்காரர்களும் ஷை புரட்டர்களும் பொது ஜனங்களும் காத்திருந்தும் சர்ப்பம் வரவில்லை. எல்லாரும் ஏமாந்து வருத்தப்பட்டுக்கொண்டே கலைந்து சென்றனர். இது பெரிய பைத்தியக்காரத்தனமல்லவா? என்று வீரகேரளம்புதூர் வைத்தியர் திரு. இசக்கியா பிள்ளை தெரிவிக்கிறார்.

## முனுசாவடி தேவி விலாஸ் வாசகசாலை ஆண்டு விழா

13-6-29 தேதியில் உயர் திரு. சுவாமி சதாசிவம் அவர்கள் தலைமையின் கீழ் முனுசாவடி "தேவி விலாஸ்" வாசகசாலையின் முதலாவது ஆண்டு விழா நடைபெறும் என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

## கோவையில் தேவாங்க மாதர் மகாநாடு,

2-6-29 தேதியில் ஸ்ரீ சாரதா பெண்பாடசாலையில் தேவாங்க மாதர் மகாநாடு நடைபெறும். அப்போது பெங்களூர் ஸ்ரீமதி லட்சுமி தேவ அம்மாள் தலைமை வகிப்பார். ஸ்ரீமதி லலிதம் பாலசுந்திரம் வரவேற்புக் கழகத் தலைவராய் இருப்பார். பெண்கள் சம்பந்தமான பலவித முறபோக்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என திரு. கே. பி. சின்னப்ப செட்டியார் பி. ஏ., பி. எல். அறிவிக்கிறார்.

## நன்கொடை.

சங்கரநயினார் கோவில் திருவாளர் ச. ஆவுடையப்பன் அவர்கள் தமது தந்தையாரின் இறந்தநாள் ஞாபகார்த்தத்தை முன்னிட்டு நமது "குடி அரசு"க்கு ஒரு ரூபா நன்கொடை அளித்துள்ளார்கள். அதற்காக நன்றி செலுத்துகிறோம். ப-ர்


## பாரீஸ் போட்டோபடம்.


உண்மை பாரீஸ் மாதர்களின் இன்ப ரகசிய படங்களில் முதன்மை வாய்ந்தது பிரஞ்சிந்தியாவாகிய புதுச்சேரியில் தான் கிடைக்குமென்பதை நேயர்கள் அறிவார்களாகையால் நாம் விவரித்துக்கூறுவது மிகைபடக்கூறியதாகும். ஆகையால் ஒரு தடவை ஆர்டர் செய்து பாருங்கள்.

டஜன் ஒன்றுக்கு ரூ. மூன்றுதான்.

மு. வடிவேல் செட்டியார்.
ஈஸ்பரன் கோவில் வீதி,
புதுவை (பிரஞ்சிந்தியா)

எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை,

ரோல்டு கோல்டு "கோல்டன்" புதுமாடல் கைக்கெடியாரங்கள். (4-h)



இதிற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடுமிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்ரவாதமானது. ரூ. 4-15-0 வி. பி. வேறு.

ஜினன் வாட்சு கம்பெனி,
பிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0




# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

*Mysteries of Wedded Life.*

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.

எல்லாப்புத்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்

வாஸன் புஸ்தக சாலை,
244, தங்கசாலைவீதி, சென்னை.

(4-a)



குறைந்த சந்தா! நிறைந்த விஷயம்!!

# "ஆனந்தபோதினி"

ஓர் செந்தமிழ் வாரப்பத்திரிகை

"ஆனந்தபோதினி" மாதசஞ்சிகையின் ஊழியம் உலகம் அறியும். அவ்வூழியத்தை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், பலருடைய வேண்டுகோளின்மேல் மாதசஞ்சிகையோடு "ஆனந்தபோதினி" வாரப்பத்திரிகையும் வெளிவருகின்றது. தமிழ்ப் பெரும்புலவர்களும் ஆங்கிலமறிந்த பேரறிஞர்களும் பிறரும் மதசமூக தேசீய முன்னேற்றத்தைப்பற்றிய தங்கள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைக் கொட்டிக் குவிக்கக் கங்கணங்கட்டி யிருக்கின்றனர்.

## உங்களுக்கு என்ன வேண்டும்?

—◇◇◇❁◇◇◇—

| | |
|---|---|
| மத உண்மைகளா? | கிராமச் சீர்திருத்தங்களா? |
| தத்துவ ஆராய்ச்சிகளா? | சமூக இயல்களா? |
| கைத்தொழில் விளக்கங்களா? | வைத்திய விசேஷங்களா? |
| வியாபார ரகசியங்களா? | தேசீய தத்துவங்களா? |
| விஞ்ஞான (Science) விநோதங்களா? | சிறுகதைப் பகுதிகளா? |
| | இன்னிசைப் பாட்டுக்களா? |

எல்லாவற்றிற்கும் "ஆனந்தபோதினி" வாரப் பத்திரிகை பூலோக கற்பகமாக விளங்குகிறது.


உள்நாடு வருடசந்தா ரூ. 5, 6 மாத சந்தா ரூ. 1-12-0.
பினங்கு, சிங்கப்பூர், முதலிய வெளிநாடுகட்கு
வருட சந்தா ரூபா 4.

"ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நயினியப்பிள்ளை நாற்பேட்டை நெ. 107, மதராஸ்.



ரூ. 2—14—0 ரூ. 2—14—0

# நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும் மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திரவேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1க்கு ரூ. 2-14-0.

கனடியன் வாட்சு பீபிள்,
ஸோல் ஏஜண்ட்ஸ்,
(4-d) ஜார்ஜ் டவுன், மதராஸ்.



கால் டஜன் ரூபாய் ஒன்றுதான்,
காட்பிக்குப்பதில்

# றேப்பிப் பவுடர்

அஜீரணம், அரோசி, அஜீர்ணபக்குவம். ஆறல் பித்தம், வெட்டை, நீர்க்கடுப்பு, பலஹீனம் இவைகளை மாற்றும். தாதுபுஷ்டி உண்டாக்கும். அயல் நாட்டுக்கு முன் பணம்.

V P. சார்ஜ் வேறு.
¼ டஜன் டின் ரூ. 1—0—0
½ டஜன் டின் ரூ. 1—12—0
S.V. ராஜப்பா, றேப்பி பாக்டரி, பழநி. S.



ஒட்டு பழச்செடிகள்! புதிய விதைகள்!!

3 வருஷம் வயதுள்ள பலஜாதி ஒட்டுமாஞ்செடிகளும், எலுமிச்சை, ஆரஞ்சு, மாதுளை, கொய்யா, பப்பளிமாஸ், குமட்டி மாதுளை முதலிய ஒட்டு செடிகளும் அநேக இனுசு ரோஜா, குரோட்டன்ஸ், புஷ்பச்செடிகளும் இருக்கின்றன. சீமை காய்கறி புஷ்பவிதைகள் தனித்தனியே 24 இனுசு செட் 1-க்கு ரூ. 2—8—0, டை 12 இனுசு ரூ. 1—4—0, நாட்டுக் காய்கறி விதை 24 இனுசு செட் 1க்கு ரூ 2—8—0, டை 12 இனுசு ரூ. 1—4—0, படங்களுடன் காட்லாக் இனாம். R. சுந்தரேச முதலியார்,
சந்திரா நர்சரி, சேலம் ஜங்ஷன்.
(8) தந்தி விலாசம்:—"சந்திரா"



# மகா மன்மத சிந்தாமணி லேகியம்.

அபாரமான தாது புஷ்டியும் நீடித்த போக சக்தியும் இழந்த ஆண்மையும் ஜீரண சக்தி, புத்திகூர்மையும் பரமானந்த சுறுசுறுப்பும் தேகாரோக்கியமும் உண்டாக்கக்கூடியது. ஒரு தரம் பரிக்ஷித்தால் உண்மை தெரியும். விலை வெகு சொற்பம். 48 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டின் நெ. 1 லேகியம் ரூ. 3—0—0. டை நெ. 2 லேகியம் டின் 1க்கு ரூ. 2—0—0 வி. பி. வேறு. சகல நோய்களுக்கும் ஸ்தானபான அநுபான பாத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான லிஸ்ட் கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

(10) தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனா பஜார், மதராஸ்.



# சுயமரியாதைத் தொண்டன்.

(வாரப்பதிப்பு)

| | |
|---|---|
| வருடசந்தா | 3—0—0 |
| வெளிநாட்டுக்கு | 4—0—0 |

இதன் ஆசிரியர், இ. சாமிநாதன்
விலாசம்:—
மானேஜர், "சுயமரியாதைத்தொண்டன்"
(f) பள்ளிபாளையம், (via) ஈரோடு.

# பொருள் செய்வகை.

1 உங்கள் வியாபாரத்துக்கு எவ்வளவு முதல் வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியுமா?
2 வாடிக்கைக்காரர்களைச் சேர்க்கும் விதம் அறிவீர்களா?
3 வியாபாரத்தில் எதெந்த காரணத்தால் எவ்வளவுபேர் நஷ்டமடைந்திருக்கிறார்களென்பது தெரியுமா?
4 வியாபாரத்தில் சித்தி அடையும் விதமென்ன?
5 புக்கீப்பிங் (கணக்கு வைக்குமுறை) ஒற்றைப்பதிவு இரட்டைப்பதிவு உங்களுக்குத் தெரியுமா?
6 துணிந்து செய்யும் வியாபாரத்தில் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள் எவை?
7 [illegible] ஏறுவதும், இறங்குவதும் முன்னால் அறியும் விதம் எப்படி?
8 [illegible] இடம் எது?
9 முதலில்லாமல் என்ன வியாபாரங்கள் செய்யலாம்?
10 நம்முடைய செயல் இன்னவை என்றும் ஈசுரச்செயல் இன்னவை என்றும் உங்களுக்குத் தெரியுமா?


இத்மாதிரி நூற்றுக்கணக்கான நூதன விஷயங்கள் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகத்தின் உதவியால் ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம். இதன்விலை ரூபாய் ஒன்றுதான். விலாசம்:—

தேவி ஆஸ்ரமம், திரௌபதை அம்மன் கோவில் வீதி, புதுச்சேரி.



கவனியுங்கள்! நல்ல லாபம்!

## PHOTO HAND CAMERA.



ரொம்பவும் குறைந்த விலை ரூ. 2—15—0.

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டனர். போட்டோவின் அளவு $3 \times 2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும், சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூபாய் 2—15—0 க்கு கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

(4) **கானடியன் வாட்சு பீபிள், ஜி. டி, மதராஸ்,**



நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

# சுவாச காச ரோக நிவாரணி.

# Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சிதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும், நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறை பரீட்சித்து பார்ப்பதவசியம்.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1 க்கு விலை ரூ. 1—4—0. தபால் கூலி பிரத்தியேகம். பினாங், சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் ரூ, 2—8—0 அனுப்பவேண்டும்.

புரோப்ரைட்டர், பூ. மா. சோக்கலிங்க முதலியார்,
திருநாவுக்கரசு வைத்தியசாலை,
18) அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்



# ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்; நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ. 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி இனாம்.


ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்;
டெலிபோன் 3311-
(4-e) தந்தி விலாசம்:—விகடன், சென்னை.



## முந்துங்கள்.

விலை ரூ, 2—12—0 தான்

130 சாமான்கள் அடங்கியஜெர்மன்பெட்டி.



சாமான்களின் விபரம்

14 காரட் ரோல்டுகோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷைசாட்டுபொத்தான்கள் செட் 12; டை கல்விழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; கோர்த்தியான கத்தி 1; காம்னேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலாகபென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபாக்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கிமாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிராண் ஸபர்படங்கள் 32; அழகிய பலாக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0

தி. கிருஷ்ண ஏஜன்ஸி
(4-c) தபால்பெட்டி 119 மதராஸ்.



## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஞு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்

மதராஸ் தென்னிந்தியா மோட்டார், இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,
(16) மைலாப்பூர், மதராஸ்



## "முன்னேற்றம்."

இஃது சுயமரியாதைக்கொள்கையை ஆயுதமாகக்கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப்பத்திரிகை.

இதன் ஆசிரியர்:- வே. சி. நாராயணசாமி
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.
விலாசம்:—மானேஜர், "முன்னேற்றம்"
(f) 152, சிசில்ரோட், சிங்கப்பூர்.


ஸ்ரீமதி நாகம்மாள் அவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.